பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

காஸ் விலை 245 ரூபாவால் எகிறியது

கொழும்பு, ஏப்.28
சமையல் எரிவாயுவின் விலை நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படுவதாக லிட்ரோ காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.
12.5 கிலோ கிராம் எடை கொண்ட
பக்கம் 14

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 15 சனிக்கிழமை 28.04.2018 | கதிர் 173

மிளகாய்த் தூள் தூவி வங்கியில் கொள்ளை

கொழும்பு, ஏப்.28
வத்தளையிலுள்ள தனியார் வங்கிக்குள் புகுந்த கொள்ளையர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கண்களில் மிளகாய்த் தூளை வீசிவிட்டு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
பக்கம் 03

தடை செய்த வலைகளுடன் வர்த்தகர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.28
யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து 25 லட்சம் ரூபா பெறுமதியான தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள மீன்பிடி வர்த்தக நிலையமொன்றில் இருந்தே பெரும்தொகை வலைகள் மீட்கப்பட்டுள்ளது
பக்கம் 14

வடக்கு சுகாதார அமைச்சர் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள்

மற்றும் இருவர் மீது நடைமுறை மீறல் தவறுகள்



யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

வடக்கின் சுகாதார அமைச்சர் டாக்டர் ஞா.குணசீலன் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படக் கூடிய பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு இடமுண்டு. மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் மீது நடைமுறைச் சட்டமுறைமைகளை மீறிச் செயற்பட்டமை தொடர்பில் குற்றம் சுமத்தி விசாரணை நடத்தப்படுவதற்கு இடமுண்டு.

- வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்ட விசாரணை அறிக்கையில் இந்த விடயங்கள் அடங்கியிருந்தன என நம்பகமாக அறியவந்தது.
பக்கம் 03

சிங்கள மக்களை புறக்கணித்தாராம் கனேடியப் பிரதமர்

ஒட்டாவா, ஏப்.28
கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே, இலங்கையில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்களைப் புறக்கணித்துள்ளார் எனக் குற்றச்
பக்கம் 14

வடக்கு முதல்வர் பதவிக்கு போட்டியிடவேமாட்டேன்

சுமந்திரன் திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.28
வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராகப் போட்டியிடும் எண்ணம் எனக்கில்லை.
- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்.
பக்கம் 14

வெசாக்குக்குப் பின்னரே அமைச்சரவை சீரமைப்பு

கொழும்பு, ஏப்.28
அமைச்சரவை மறுசீரமைப்பு, எதிர்வரும் வெசாக் தினத்துக்குப் பின்னர் இடம்பெறுமென அரச
பக்கம் 03

தங்கள் பணியை மட்டும் ஊடகங்கள் செய்யட்டும்

அமைச்சர் நிமால் சீற்றம்

கொழும்பு, ஏப்.28
பிளவடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்று சேர்க்கவோ அல்லது பிளவை மேலும் வலுப்படுத்தவோ ஊடகங்கள் முயற்சிக்கக்கூடாது. ஊடகங்கள் தங்களது பணி
பக்கம் 14

யாழ். மேயர் ஆர்னோல்ட் அதிகார துஷ்பிரயோகம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விக்கிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப்.28
யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் விசாரணைகளை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.
பக்கம் 14

இனி துரகசியம் அல்ல!

பத்திரிகையாளர் பணி என்பது கத்தியில் நடப்பது போன்றது.
பல சமயங்களிலும் 'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்ற கதை மாதிரி இடையில் நின்று அவலப்படும் பணியாக பத்திரிகையாளரின் வேலை அமைந்துவிடும்.
தலைப்பிலோ அல்லது செய்தியிலோ ஒரு சொல்லிலேயே ஒரு 'டுவிஸ்ட்' கொடுத்து கதையை மாற்றி விடக்கூடிய மதிநுட்ப ஊடகவியலாளர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள்.
பக்கம் 03

அலரி மாளிகையிலிருந்து மடிக் கணினிகள் மாயம்!

இரகசியத் தகவல்கள் கசிந்தனவா?

கொழும்பு, ஏப்.28
அலரி மாளிகையிலிருந்து மடிக்கணினிகள், நவீனரகப் புகைப்படக் கருவிகள் உள்ளிட்ட அரசுக்குச் சொந்தமான பல இலட்சம் பெறுமதியான
பக்கம் 14

நெப்போலியன், மதனராஜாவை நாடு கடத்த நடவடிக்கை எடுக்குக!

சட்ட மா திணைக்களத்திடம் பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஏப்.28
ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான செபஸ்ரியன் ரமேஷ் அல்லது நெப்போலியன் மற்றும் நடராஜா
பக்கம் 03

இரணைதீவில் போராடும் மக்களுக்கு உலர் உணவு

கிளிநொச்சி, ஏப்.28
இரணைதீவில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரிப் போராட்டம் நடத்தி வரும் மக்களுக்கு ஒரு தொகுதி உலர் உணவுப்
பக்கம் 14

மீண்டும் தலையெடுக்கும் வாள்வெட்டுக் கும்பல்கள்!

யாழ்ப்பாண பொலிஸாரின் விடுமுறை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்.28
சாவகச்சேரி மற்றும் கொக்குவில் இடம்பெற்ற வாள்வெட்டுக் கும்பல்களின் அடாவடித்தனங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து இதுவரைக்கு எவரையும் கைது செய்யாததால் யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் நிலையங்களின் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரின தும் விடுமுறைகள் நேற்று
பக்கம் 14

ஐ.தே.கவை எவராலும் வீழ்த்திவிட முடியாது!

பிரதமர் ரணில் சவால்

கொழும்பு, ஏப்.28
ஐக்கிய தேசியக் கட்சியை எந்தச் சக்தியாலும் வீழ்த்தவே முடியாது. எமது கட்சிக்குள் சில முரண்பாடுகள் இருந்த படியால்தான் கட்சியை முழுமையாக மறுசீரமைத்
பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir

இலங்கை- சீனா இணைந்து கட்டும் பெரிய ஆடம்பர வணிக வளாகம்!

கொழும்பு, ஏப்.28

கொழும்பு நகரில், மிகப் பெரிய ஆடம்பர வணிக வளாகம் ஒன்றைக் கட்டும் பணிகளை இலங்கையும், சீனாவும் இணைந்து நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளன.

தெற்காசியாவின் கவர்ச்சி கரமான கொள்வனவு நகராக கொழும்பை மாற்றும் இலக்குடன், இந்தப் பெரிய ஆடம்பர வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது.

New Odel Mall என்ற பெயரில் அமைக்கப்படவுள்ள இந்த பெரிய வணிக வளா கத்தை அமைப்பதற்கான நிதியை Odel வணிக வளாகத்தின் உரிமை நிறுவனமான, Softlogic Holdings Limited முதலிடவுள்ளது.

சீனாவின் அரச கட்டுமானப் பொறியியல் நிறுவனம் இந்த வணிக வளாகத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

645,000 சதுர அடிக்கும் மேல் பரப்பளவு கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பெரிய வணிக வளாகத்தில், 'green boulevard' எனப்படும் வானகதோட்டம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு சாதகமான அம்சங்களும் அமைந்திருக்கும்.

இதன் கட்டுமானப் பணிகள் 2020ஆம் ஆண்டில் நிறைவடையும் என்றும் கூறப்படுகிறது.

(க)

ஐந்தாவது நாளாக இரணைதீவில் தங்கியிருந்து போராடும் மக்கள்!

யாழ்ப்பாணம், ஏப். 28

இலங்கைக் கடற்படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இரணைதீவில் தங்கியிருந்து தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், முழங்காவில்- இரணைமாதா நகரில் தாம் தங்கியுள்ள பகுதியில் கடந்த ஒரு ஆண்டாக தொடர் போராட்டத்தை நடத்தி வந்தனர்.

எனினும், கடற்படையினரின் சாதகமான பதில் எதுவும் கிடைக்காத நிலையில், கடந்த 23 ஆம் திகதி, படகுகளில் இரணைதீவுக்குச் சென்று அங்குள்ள தேவாலயத்தில் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும், தொடர்ந்தும் நேற்று ஐந்தாவது நாளாக அந்த தேவாலயத்தில் தங்கியிருந்து தமது காணிகளை விடுவிக்கக் கோரி அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட் டுள்ள மக்களை தமிழ் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் சிலர் சென்று பார்வையிட்டுள்ளனர். அத்துடன், அவர்களின் தேவைக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் எடுத்துச் சென்று வழங்கியுள்ளனர்.

இலங்கையில் தனது பிரஜைகளுக்கு அமெரிக்கா பாதுகாப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஏப் 28

சர்வதேசத் தொழிலாளர் தின நிகழ்வை முன்னிட்டு இலங்கையில் உள்ள தனது பிரஜைகளுக்கு அமெரிக்கா பாதுகாப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மே மாதம் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை இந்தப் பாதுகாப்பு எச்சரிக்கை நடைமுறையில் இருக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

சர்வதேசத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய பகுதிகளில் அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் பல்வேறு கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.

இதனால் வீதி மூடல்கள், வீதிப்போக்குவரத்து தடை உட்பட்ட பல இடையூறுகள் ஏற்படக்கூடும் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அமைதியான பேரணிகளின் போதும் வன்முறைகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

இதனால் இலங்கையில் உள்ள தமது நாட்டுப் பிரஜைகளை தொழிலாளர் தின நிகழ்வுகளில் இருந்து விலகியிருக்குமாறு அமெரிக்கத் தூதரகம் கோரியுள்ளது.

அத்துடன் உள்ளூர் ஊடகங்களின் செய்திகளை அறிந்து அதற்கு ஏற்ப செயற்படுமாறு அமெரிக்க பிரஜைகளிடம் அமெரிக்க தூதரகம் கேட்டுள்ளது.

(ஐ)

பூநகரி பிரதேசத்தின் அபிவிருத்தி குழுக் கூட்டம்

கொழும்பு, ஏப். 28

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தின் இந்த வருடத்துக்கான முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றையதினம் இடம் பெற்றது.

கூட்டத்தின் இணைத்தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில், பூநகரி பிரதேச செயலாளர் சி.ச.கிருஷ்ணேந்திரனின் அறிமுக உரையுடன் ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது.

இதன்போது, பல்வேறு அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும், மாகாணசபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, த.குருகுலராஜா தவிர வேறு எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையர் இருவர் அமெரிக்காவில் கைது!

கொழும்பு, ஏப். 28

அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக பிரவேசிக்க முற்பட்ட இரண்டு இலங்கையர்கள் அமெரிக்காவின், ப்ளோரிடா மாநிலத்தில் உள்ள பாம்பீச் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் மேலும் 11 வெளிநாட்டவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அமெரிக்க ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

கடல்மார்க்கமாக சிறிய படகு ஒன்றின் மூலம் அவர்கள் அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க முயற்சித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

ஐ.தே.க. முக்கிய பதவிகளில் மாற்றம்: கட்சிக்குள் குழப்பம் நீடிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள நிலையிலும், கட்சிக்குள் குழப்பங்கள் நீடிக்கின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கவின் தலைமைத்துவத்துக்கு எதிராக அண்மையில் ஏற்பட்ட அதிருப்திகளை அடுத்து, கட்சியில் மறுசீரமைப்புகளை செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க இணங்கியிருந்தார்.

கடந்த சில வாரங்களாக ஐ.தே.கவின் உயர்மட்ட பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையிலான சீர்திருத்த முயற்சிகள்

மேற்கொள்ளப் பட்டன. இதற்கமைய, ஐ.தே.கவின் பொதுச் செயலாக அகிலவிராஜ் காரியவசம் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் தவிசாளராக கபீர் ஹாஷிம் நியமிக்கப்பட்டார்.

அத்துடன், ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளராக நவீன் திசநாயக்கவும், ஹர்ச டி சில்வா பொருளாளராகவும், ருவான் விஜேவர்த்தன பிரதிப் பொதுச்செயலராகவும், நியமிக்கப்பட்டனர்.

கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாசவும், உதவித் தலைவராக ரவி கருணா நாயக்கவும் தொடர்ந்தும் அதே பதவியை வகிப்பர் என்றும் முடிவு செய்யப் பட்டது.

இந்த நியமனங்களுக்கு ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டத்தில் நேற்று அங்கீகாரம் அளிக்கப் பட்டது.

அதேவேளை, ரவி கருணா நாயக்கவுக்கு மீண்டும் உதவித் தலைவர் பதவி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, செயற்குழுவில் இருந்து விலகுவதாக கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா அறிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாசவும் இந்த நியமனம் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தின் வயதெல்லையை 40 ஆக உயர்த்துக

ஜனாதிபதி, பிரதமரிடம் சம்பந்தன் கோரிக்கை

பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமன வயதெல்லையை 40 ஆக உயர்த்துமாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம்கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்.

நாட்டில் வேலைவாய்ப்பற்றிருக்கும் 50,000 க்கும் மேற்பட்ட பட்டதாரிகளில் கணிசமான தொகையினரை இரண்டுவருடப் பயிற்சியில்இணைத்துக்கொண்டு, அந்தப் பயிற்சியின் பின்பு அவர்களுக்கு அரசில் நிரந்தர நியமனத்தை வழங்கும் பொருட்டு அரசு மாவட்டச் செயலகங்களின் ஊடாகப் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளை அண்மையில் நடத்தியிருந்தது.

இந்த நேர்முகப் பரீட்சையின் போது உச்ச வயதெல்லை 35 வயதாக இருக்கும் என்றும், முதற் பட்டப்படிப்பின் பின்னர் பெற்றுக்கொண்ட மேலதிகக் கல்வி, விசேட தொழிற் தகைமை மற்றும் விளையாட்டுத்தகைமை போன்ற தகுதிகளுக்குக் கூடுதல் புள்ளிகள் வழங்கப்படும் எனவும், பெறப்பட்டபுள்ளிகள் நாடளாவிய அடிப்படையிலேயே கணிப்பிடப்பட்டுத் தெரிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும், இதனால் வடக்கு–கிழக்குப் பட்டதாரிகள் கூடுதல் பாதிப்புக்குள்ளாக நேரிடும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதன்படி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு தெரிவுகளைச் செய்யவேண்டுமென ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் எதிர்கட்சித் தலைவர் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

★ கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதில் வடக்கு–கிழக்குப் பட்டதாரிகளுக்கு யுத்தம் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாகக் கூடுதல் காலம் செலவிட நேர்ந்துள்ளமையால் ஆகக் கூடியவயதெல்லையை 35 இலிருந்து 40 வரைஅதிகரிக்கவேண்டும்.

★ மேலதிக மாற்றுத் தொழிலாண்மைக் கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வடக்கு – கிழக்குப் பட்டதாரிகளுக்கு யுத்தம்காரணமாகக் கிடைக்காமல் போனமையால் அவர்கள் ஏனைய மாவட்டப் பட்டதாரிகளுடன் சமமாகப் போட்டி போட்டுக் கூடுதல் புள்ளிகள் பெறமுடியாத நிலைஉள்ளது.

★ வடக்கு–கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வியாபார முயற்சிகள் அதிகம் இல்லாமை காரணமாக அந்தத் துறைகளில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் பெறும் சந்தர்ப்பம் இல்லாமையினால் அவர்கள் அரச தொழில் வாய்ப்புக்களையே எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது.

★ வடக்கு–கிழக்குப் பிரதேசங்களின் வேலைவாய்ப்பின்மை தேசியமட்ட அளவை விட அதிக அளவில் காணப்படுவதோடு, இப் பிரதேசங்கள் கல்வித் துறை மற்றும் அபிவிருத்தியிலும் ஏனைய மாவட்டங்களை விட மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

★ இந்நிலையில் தேசியமட்டத்தில் புள்ளிகளை நிரைப்படுத்தித் தெரிவுகளை மேற்கொண்டால்,வடக்கு–கிழக்குப் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் மிகவும் குறைந்து விடுமென்பதால் அவர்கள் மிகுந்த பாதிப்பை அடைவர். அதனால் புள்ளிகள் மாவட்ட மட்டத்தில் நிரைப்படுத்தப்பட்டு விகித சம அடிப்படையில் சகல மாவட்டங்களுக்கும் சமமான வாய்ப்பினைவழங்கும்பொருட்டுதெரிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறுசெய்வதன் மூலம் சகல மாவட்டங்களிலிருந்தும் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படக்கூடிய நிலைமை உருவாக்கப்படுவதால் சகலருக்கும் நியாயமும் சமவாய்ப்பும் கிடைக்கும். (ஐ)

மக்கள் போராட்டமே உரிமைகளுக்குத் தீர்வு

சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப்.28

போராட்டத்தின் மூலம் மாத்திரமே மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இரணைதீவு மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாகவும் இரணைதீவில் தங்கி தமது சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேரில் சென்று சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமது அடிப்படைத் தேவைகளுக்காக, மக்கள் தாமாகவே போராடி வெற்றியும் கண்டுள்ளனர். கேப்பாப்பிலவு, கிளிநொச்சியில் பரவிப்பாஞ்சான், வலி–வடக்கு போன்ற பகுதிகள் மக்களின் போராட்டங்களின் மூலமாகவே மீட்கப்பட்டுள்ளன. எனவே, மக் களின் போராட்டங்கள் ஒரு நாளும் தோற்றுப் போகா – என்றார். (ஐ)

நெப்போலியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதனராஜா அல்லது மதன் ஆகிய இருவரையும் லண்டனிலிருந்துநாடுகடத்தநடவடிக்கை எடுக்குமாறு சட்டமா திணைக்களத்திடம் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உள்ளிட்டவர்கள் மீது ஈ.பி.டி.பியினரால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலின்போது கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் இருவர் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் செபஸ்ரியன் ரமேஸ் அல்லதுநெப்போலியன், நடராஜா மதனராஜா அல்லது மதன் மற்றும் அன்ரன் ஜீவராசா அல்லது ஜீவன் ஆகிய மூவருக்கும் இரட்டைத்தூக்குத்தண்டனைவழங்கியாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

இந்த வழங்கு விசாரணை நடைபெற்றபோது, செபஸ்ரியன் ரமேஸ் அல்லது நெப்போலியன், நடராஜா மதனராஜா அல்லது மதன் ஆகிய இருவரும் வெளி நாட்டில் இருந்தனர். வழக்கின் தீர்ப்பு 2016ஆம் ஆண்டு டிசெம்பர் 7ஆம் திகதி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் செபஸ்ரியன்ரமேஸ்அல்லதுநெப்போலியன், நடராஜா மதனராஜா அல்லது மதன் இருவருக்கு யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றால்திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன், வெளிவிவாகார அமைச்சு, நீதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம்ஆகியஇணைந்து இந்தக்குற்றவாளிகள் இருவரையும் நாடு கடத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் லண்டனில் வதியும் செபஸ்ரியன் ரமேஸ் அல்லது நெப்போலியன், நடராஜா மதனராஜா அல்லது மதன் ஆகிய இருவரையும்நாடு கடத்தல் வழிமுறையில் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்கள சொலிசிட்டர் ஜெனரலுக்குப்பாதுகாப்புஅமைச்சின் சட்ட ஆலோசகர் கடந்த 17ஆம் திகதி அனுப்பிவைத்த கடிதத்தின் பிரதி யாழ்ப்பாணம் மேல் நீதமன்றுக்கு அனுப்பப் பட்டுள்ளது. (ஐ)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அப்படி ஓர் அனுபவம் கிட்டியது.

நேற்றுக் காலை யில் 'காலைக் கதிர்' வெளியானதும் தமிழரசுக் கட்சியின் ஒரு முக்கிய தூணிடம் இருந்து ஓர் அழைப்பு வந்தது.

"நேற்று (நேற்றுமுன்தினம்) கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனின் ஊடக மாநாட்டுச் செய்தியை இன்று உங்கள் பத்திரிகையின் தலைப்புச் செய்தியாகப் பிரசுரிக்கின்றீர்கள். ஒரு தடவை அந்த ஊடக மாநாட்டு வீடியோவை எடுத்துப் போட்டுப் பாருங்கள், நீங்கள் போட்ட தலைப்பின் சாயலில் சுமந்திரன் பேசவேயில்லை. இது உங்கள் பத்திரிகையியலுக்கு அழகில்லை." – என்று ரொம்பவும் மரியாதையுனும், கனவான் தனத்துடனும் முறையிட்டார் அவர்.

எங்கள் தலைப்பைப் பார்த்தேன் நான். *"ஈ.பி.டி.பியினருக்கு சுமந்திரன் சவால்!; பேச்சு நடத்திய ஆதாரங்கள் இருந்தால் வெளியிடுங்கள்"*என்று தலைப்பிட்டிருந்தோம்.

"அந்தத் தொனியில் – அந்தச் சாரப்பட – சுமந்திரன் கருத்துக் கூறவில்லையா?"– என்று நான் கேட்டேன்.

"ஒரு தடவை வீடியோப் பிரதியைப் போட்டுப் பாருங்கள். இது முறைப்பாடல்ல. திருத்தம் போட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எங்களுக்கு இல்லை. ஆனால் செய்திவெளியிடலில் ஒரு பெரிய தவறு இருக்கின்றதாக உணர்கின்றோம். அதைச் சுட்டிக் காட்டுகின்றோம். கவனிப்பதும், கவனிக்காததும் உங்களைப் பொறுத்தது.!" – என்று மிகுந்த கண்ணியத்துடன் அவர் கூறினார்.

அப்படி அவர் சொன்னமையால் அந்த வீடியோவைப் போட்டுப் பார்த்துக் கொள்வது என்று தீர் மானித்தேன்.

அந்தப் பேட்டியின் நடுவே செய்தியாளர் ஒருவர் ஒரு கேள்வியை சுமந்திரனிடம் எழுப்புகின்றார்.

"தங்களுடன் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைநடத்தியதற்கான ஆதாரங்கள்தங்களிடம்உள்ளன என்று ஈ.பி.டி.பியினர் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியிருந்தனர். அப்படி என்ன பேச்சுவார்த்தை நடத்தியிருந்தீர்கள்...?" – இதுதான் ஊடகவியலாளரின் கேள்வி.

இதற்கானசுமந்திரனின்பதிலும் பின்வருமாறு இருந்தது:–

"பேச்சுவார்த்தை நடத்திற அளவுக்கு ஈ.பி.டி.பி. ஒன்றும் பெரிய கட்சியல்ல; நாங்கள் மினக்கெட்டுப் பேச்சு நடத்திற அளவுக்கு அவர்கள் ஒண்டும் பெரிய ஆள்களும் இல்லை. ஆனபடியால், அப்படி ஏதும் அவர்களிடம் இருந்தால், அவர்கள் அதனை வெளிப்படுத்தினால்நல்லது. அதனுடன்(அந்த விடயத்துடன்) நேரம் 'மினக்கெட' எனக்கு விருப்பமில்லை. இது (என்னைப் பொறுத்தவரை) ஒரு தேவையில்லாத விவரம்." – இவ்வளவுதான் சுமந்திரனின் பதில்.

இதன்சாரத்தையேஎமதுசெய்தி பிரதிபலித்திருந்தது. அதில்பெரிய அளவில் தவறு – அல்லது மாற்றம் – அல்லது திரிப்பு – அல்லது பிழை – இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆனால், அந்தத் தலைவர் காலையில்எனக்குசுட்டிக்காட்டிய படி எங்கள் தலைப்பில் ஒரு 'டிவிஸ்ட்'வந்துவிட்டதைநாங்கள் ஏற்று ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

சுமந்திரன் அந்த மூன்று வசனக் கருத்தை வைத்துக் கொண்டு *'ஈ.பி.டி.பியினருக்கு சுமந்திரன் சவால்! பேச்சு நடத்திய ஆதாரங்கள் இருந்தால் வெளியிடுங்கள்'*என்று தலைப் பிடுவது – அதுவும் முதல பக்கத்தின் முக்கிய தலைப்புச் செய்தியாகப் பிரசுரிப்பது– கொஞ்சம் 'டூ மச்'தான்.

கொழும்பில் மூத்த ஊடகவியலாளர் ஒருவருடனும் இது குறித்துப் பேசினேன்.

"நண்பா... இது 'சிண்டு' முடியும் வேலை. ஈ.பி.டி.பியையும், கூட்டமைப்பையும் கொழுவி வைக்கின்றமுயற்சி. அமுங்கி, அடங்கிப் போன விடயத்தை நீங்களே கிண்டிக் கிளறி எடுத்து, இரண்டு தரப்பையும் உசுப்பேத்தி, குழப்பம் பண்ணும் வஞ்சகத்தனமாகவும் இது அர்த்தம் பண்ணப் படலாம். கொஞ்சம் பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்."– என்று 'அட்வைஸ்' தந்தார் அந்த மூத்த ஊடகவியலாளர்.

'Sensitive Journalism' என்று நினைத்துக் கொண்டு நாங்களும் சில சமயங்களில் எல்லை மீறிவிடுவதுதப்புத்தான்.

"ஈ.பி.டி.பியும், கூட்டமைப்பும் இணங்கிப் போகவிரும்பினாலும் நீங்கள் விடவே மாட்டியள் போல" –என்றுஎங்கள்சிவனக்கோவிலடி அந்திமாலைக் குழு நண்பர் ஒருவரும் இதனை விமர்சித்திருந்தார்.

தவறு இருந்தால் சம்பந்தப் பட்டோர்பொறுத்தருள்வார்களாக!

-மின்னல்-

வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாய அமைச்சர் க.சிவநேசன்(பவன்) மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் அடுக்கப்படவில்லை எனவும் அறியவந்தது.

வடக்கின் புதிய அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையை, மாகாண பிரதம செயலர் நேற்று முன்தினம்ஆளுநரிடம்சமர்ப்பித்தார்.

ஆளுநரின் பணிப்புக்கு அமைய இந்த விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பது தெரிந்ததே.

அந்தஅறிக்கையிலேயே மேற்படி விவகாரங்கள் அடங்கியிருந்தன என நம்பகரமாக அறிய வந்தது.

சொந்த வாகனம் ஒன்று இல்லாமல், வாகனத்திற்கு எரிபொருள் என்ற பெயரில் மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டமை –

மாகாண சபை அமைச்சர் என்ற முறையில் சபையால் வழங்கப்பட்ட தனது பணியாளர் தொகுதிக்கான சம்பளத்தை, சம்பந்தப்பட்ட பணியாளர்களுடன் தனித்தனியாக தாமும் சேர்த்துக் கூட்டுவங்கிக் கணக்குகளை ஆரம்பித்து அந்தக் கணக்குகளுக்கு வரவிட்டமை போன்ற பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் மாகாண சுகாதார அமைச்சருக்கு எதிராக உள்ளன என்றும் –

இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கான சான்றாதாரங்களும் காணப்படுகின்ற என்றும் – அந்த விசாரணை அறிக்கையில் விவரிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன் ஆகியோரின் அமைச்சுக்களில் நிதி விடயங்களின் கையாள்கையின் போது சரியான நடைமுறை ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது என அறியவந்தது.

வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் இன்று யாழ் திரும்புகிறார். அவர் வந்ததும் இந்த விடயங்கள் குறித்து அவருடன் ஆளுநர் ஆலோசனை நடத்திய பின்னர், உரியநடவடிக்கைக்குப்பரிந்துரை செய்வார் என எதிர்பார்க்கப் படுகின்றது. (உ)

மிளகாய்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார்சைக்கிளில்வந்தகொள்ளையர்கள் இருவரே நேற்று மாலை இந்தத் துணிகரக் கொள்ளையில்ஈடுபட்டனர்எனப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தென்னிலங்கையில் அண்மைக்காலமாக வங்கிக் கொள்ளைகள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

செவாக்குக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சித்திரைப் புத்தாண்டுப் பின்னர், இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு இடம் பெறுமென, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில், நேற்று இந்த மறுசீரமைப்பு இடபெறுவதாக இருந்தது.

ஆயினும், அமைச்சுப் பதவிகளைத் தீர்மானிக்கும் பணிகள் இன்னமும் முடிவடையாத நிலையில், வெசாக் பௌர்ணமிக்குப் பின்னரே, இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

கொதிநிலையில் ஐ.தே.கட்சி

தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிகரமாகத் தோற் கடித்துவிட்டார்.

கட்சி மறுசீரமைப்புத் தொடர்பில் நீண்ட காலமாகக் கட்சிக் குள் இருந்து கிளம்பி வந்த புகைச்சலைக் கட்டுப்படுத்தி விவகாரத்தை சுமுகமாகத் தீர்த்து வைத்து விட்டார்.

கடந்த புதனன்று கட்சியின் அரசியல் குழுவையும் அடுத்த நாள் செயற்குழுவையும் கூட்டி புதிய நிர்வாகிகள் பட்டியலை அங்கீகரித்து ஏற்கப் பண்ணிவிட்டார்.

தமக்கு விருப்பமான – பிடித்தமான – சகாக்களை கட்சிக் குள் அடுத்த கட்டத்தில் பொறுப்புக்கு அமர்த்தித் தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டு விட்டார்.

– இவ்வாறு வெளிவரும் செய்திகளை நோக்கும்போது இப்படியெல்லாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னைப் பலப்படுத்திக்கொண்டு விட்டார் என்றே கணிப்பிடத் தோன் றும்.

ஆனால், உண்மை நிலைவரம் அதுவல்ல என்கின்றன கொழும்புச் செய்திகள். 'மழை விட்டும் தூவானம் அடங்கா தமை' போல, ரணிலின் தலைமைக்கு எதிராகக் கட்சிக்குள் உருவாகியிருக்கும் கிளர்ச்சி இன்னும் முற்றாக அடங்கிய பாடில்லை. அது நீறு பூத்த நெருப்பாக உள்ளேயே கனன்று கொண்டிருக்கின்றது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தக வல் வெளியிடுகின்றன.

ஆங்காங்கே, இழுத்து ஒட்டுப் போட்டு ஒழுக்கை அவர் நிற்பாட்டியிருக்கின்றார் என்று கூறலாம். ஆனால், திடீரென அரசியல் புயல் காற்று வீசுமானால் அவரது தலைமை அடித் துக் செய்யப்படக் கூடிய மிகப் பலவீனமான கட்டத்திலேயே அவரது நிலைமை இருப்பதாகத் தெரிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுள் ஒரு வர் ஜோசப் மைக்கல் பெரேரா. ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் ஆட்சிக் காலத்தில், 2001 டிசெம்பர் முதல் 2004 பெப்ரவரி வரை ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு இருந்தபோது சபாநாயகராகச் செயற்பட்டார். உள்நாட்டலு வல்கள் அமைச்சராகவும், எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவா கவும் பணியாற்றியவர். கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலிருந்து அவர் வெளியேறியிருக் கின்றார். ஊழல் குற்றச்சாட்டுகளின் பின்புலத்தில் அமைச் சரவையிருந்து வெளியேற்றப்பட்ட ரவி கருணாநாயக்கவை மீண்டும் கட்சியின் உதவித் தலைவர் பதவிக்கு நியமிக்கின் றமை முழுத் தவறு என்று கட்சியின் செயற்குழு கூட்டத்தில் வெளிப்படையாகக் கூறிவிட்டு தமது செயற்குழு உறுப்பினர் பதவியையும் துறந்து அவர் வெளியேறியுள்ளார்.

கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு அடுத்து கட்சிக்குள் முக்கிய பதவிகள் இரண்டு. ஒன்று – பிரதித் தலைவர் பதவி. அடுத்தது – பொதுச் செயலாளர் பதவி.

பிரதமர் ரணிலுக்கு அடுத்து கட்சியின் தலைமையைப் பொறுப்பேற்கப் பார்த்து – காத்து – இருப்பவர் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகன் சஜித் பிரேம தாஸ. வழமைபோல பிரதித் தலைவர் பதவி அவருக்கே வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், அவரோ பொதுச் செயலாளர் பதவி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மிக நம்பிக்கைக்கு உரியவரான கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துக்கு வழங்கப் படுகின்றமையை கட்சிக்குள்ளேயே கடுமையாக எதிர்த்துள் ளார். தமது எதிர்ப்பை வலிமையாக அவர் பதிவு செய்தும் இருக்கின்றார்.

இதேசமயம், இந்தக் கட்டமைப்பு மாற்றத்துக்கு கட்சி யின் பின்வரிசை எம்.பிக்கள் பலரும் எதிர்ப்பு வெளியிட்டிருக் கின்றனர்.

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவராகத் தொடரட்டும். அதில் எங்களுக்குப் பிரச்சினையோ, ஆட்சே பமோ இல்லை. ஆனால் குறைந்த பட்சம் கட்சியின் அடுத்த தலைவர் சஜித் பிரேமதாஸவே என்பது இப்போதே அறிவிக் கப்படவேண்டும். அப்போதுதான் எதிர்காலத் தேர்தல்களை நாம் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்." – என்று கட்சி யின் பின்வரிசை உறுப்பினர்கள் சார்பில் கேஷான் விதா னகே எம்.பி. கூறுகின்றார்.

ஐ.தே.கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களான 15 எம்.பிக் களும், பதினைந்து பிரதி அமைச்சர்களும் இத்தகைய அதி ருப்தி நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

ஆனால், கட்சியின் புதிய பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் வேறு விதமாகக் கூறுகின்றார்.

"உள்ளூராட்சித் தேர்தல் பின்னடைவின் பின்னர் கட்சி மறுசீரமைப்புக் குறித்து எல்லோரும் பேசினர். அதன் விளை வாக இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஓர் அரசியல்குழு தெரிவு செய்யப்பட்டது. எல்லா ஐ.தே.கவினரும் வாக்களித்து அந் தக் குழுவை தெரிவு செய்தனர். ஜனநாயக முறையில் தெரி வான அக்குழு கட்சியை மறுசீரமைத்து புதிய நியமனங்களை வழங்கியுள்ளது. அதை எப்படித் தவறு என்பீர்கள்?" – என்று கேட்கிறார் அகிலவிராஜ்.

எது எப்படியென்றாலும் ஐ.தே.கவின் உள்கட்சி மோதல் எப்போதுமே கொதிநிலையில்தான் இருக்கும் போலும்.

வடக்கு – கிழக்கு ஊடக அமைப்புக்கள் மட்டக்களப்பில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 28

மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் (தராகி) படுகொலை அரங்கேற்றப்பட்ட நினைவு நாளான இன்று சனிக்கிழமை வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங் களையும் சேர்ந்த ஊடகவியலா ளர்கள் மட்டக்களப்பில் முதல் தட வையாக ஒன்றுகூடிக் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதில் அனைவரையும் பங் கேற்குமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். ஊடக அமையம் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:

இன்று முற்பகல் 10.00 மணிக்கு மட்டக்களப்பு நகரில் நாம் ஒன்று கூடி ஊடகப்படு கொலைகளுக்கு நீதி கோரி மீண் டும் எமது குரல்களை ஒலிக்க விடவுள்ளோம்.

நீண்டதொரு யுத்த சூழலில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளினில் தமிழ் தேசியம் சார்ந்த ஊடகங்கள் மீதும் ஊடக வியலாளர்கள் மீதும் வன்முறை கள் பலவழிகளிலும் கட்டவிழ்த்து விடப்பட்டே வந்துள்ளன. அது கொலையாகவோ, காணாமல் போகச்செய்வதாகவோ அல்லது தாக்குதல், அச்சுறுத்தலாகவோ பல வழிகளில் முன்னெடுக்கப் பட்டு வந்தது.

இத்தகைய கோரமிக்க சூழ லில் நாம் எமது 41 சகபாடிகளை இழந்து இன்றுவரை அவர்க ளுக்கு நீதி கிட்டாது போராடி வருகின்றோம்.

நல்லாட்சியெனச் சொல்லிக் கொண்டு கதிரையேறி அரசு இன்று கொல்லப்பட்ட மற்றும் காணாமல்போயுள்ள எமது சக ஊடக நண்பர்களுக்கு விலை பேசிநட்டாடுதருவது பற்றிபேசிக் கொண்டிருக்கின்றது.

ஆனால் மறுபுறம் தெற்கில் படுகொலையான சகோதர இன ஊடகவியலாளர்களது கொலை கள் தொடர்பில் விசாரணை களை அரசியல் நலன்கருதி முன் னெடுக்கமுயல்கின்றது. அவ்விசா ரணைகள் கூட வெறும் இழுத் தடிப்பாகவே வருடக்கணக்கில் நடந்தேறி வருகின்றன.

இந்நிலையினில் அரச படை களாலும் அதனோடிணைந்து செயற்பட்ட துணைப்படைகளா லும் அரங்கேற்றப்பட்ட ஊடக வியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான ஒடுக்கு முறைக்கு நீதி கேட்டு மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் (தராகி) படுகொலை அரங்கேற்றப் பட்ட நினைவு நாளில் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்க ளையும் சேர்ந்த ஊடகவியலா ளர்களான நாம் மட்டக்களப் பில் முதல் தடவையாக ஒன்று கூடவுள்ளோம்.

உன்னதமான ஊடகச் சுதந் திரத்திற்காக உயிரைக் கொடுத்த ஒரு பரம்பரையில் பயணிக்கும் தமிழ்த் தேசிய ஊடகத்துறை சார்ந்த அனைத்து ஊடக அமைப் புக்களினதும் பங்கெடுப்புடன் இக்கவனவீர்ப்புப் போராட்டம் நடக்கவுள்ளது.

ஊடகப்படுகொலைகளுக்கு நீதியைப் பெற்றுக்கொள்வதுடன் ஊடகவியலாளர்கள் சுதந்திர மாகப் பணியாற்றுவதற்கான அவர்களது உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள அனைத் துத் தரப்புக்களினதும் ஆதர வையும் நாம் வேண்டிநிற் கின்றோம். - என்றுள்ளது.

(ஐ)

புத்த பகவானின் புனிதத் தாது முதல் தடவையாக யாழுக்கு

யாழ்ப்பாணம், ஏப் 28

புத்த பகவானின் ஒரு தொகை புனித தாதுப் பொருள்கள் யாழ்ப் பாண மண்ணுக்கு வரலாற்றில் முதல் தடவையாகக் கொண்டு வரப்பட்டு யாழ்ப்பாண மக்க ளின் தரிசனத்துக்கு வைக்கப் படுகின்றன என்று இராணுவத் தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தலைமை யகத்தில் நடத்திய விசேட ஊடக வியலாளர்கள் மாநாட்டிலேயே

யாழ். கட்டளைத் தளபதி தெரிவிப்பு

அவர் இதைத் தெரிவித்தார்.

இராணுவத்தின் யாழ். மாவட் டக் கட்டளைத் தலைமையகத் தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத் தில் கொண்டாடப்பட உள்ள புனித வெசாக் பண்டிகைக்கான ஏற்பாடுகள் குறித்து மேஜர் ஜென ரல் தர்ஷன ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

புத்த பகவானின் புனித தாதுப் பொருள்கள் உயரிய, மேலான வணக்கத்துக்கு உரியவை. இவை எங்கு காணப்படுகின்ற னவோ, எங்கு கொண்டுசெல்லப் படுகின்றனவோ அங்கெல்லாம் வனப்பும், செழிப்பும் நின்று நில வும் என்பது உலகம் தழுவிய புத்தசமயிகளின் நம்பிக்கையும், விசுவாசமும் ஆகும்.

கண்டி தலதா மாளிகையில் புத்த பகவானின் புனித தாதுப் பொருள்களில் ஒன்றான புனிதப் பல் வைக்கப்பட்டு உள்ளது. இதனால்தான் தலதா மாளிகை மிகுந்த உயர்ந்த சிறப்பு பெற்று விளங்குகின்றது. அத்துடன் கண்டி மாவட்டமும் வனப்பும், செழிப்பும்நிறைந்ததாகக்காணப் படுகின்றது.

யாழ்ப்பாண மண் வனப்பும், செழிப்பும் நிறையப் பெற்று மிளிர வேண்டும், யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை செழுமை யும், செம்மையும் பெற வேண் டும்என்கிறஒரேயொருகாரணத் துக்காக புத்த பகவானின் ஒரு தொகை புனித தாது பொருள் களை யாழ்ப்பாண மண்ணுக்கு வரலாற்றில்முதல்தடவையாகக் கொண்டு வந்து யாழ்ப்பாண மக்களின் தரிசனத்துக்கு வைக் கின்றோம்.

இவை எதிர்வரும் 29ஆம், 30ஆம், 01ஆம் திகதிகளில் வீர சிங்கம் மண்டபத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு இருக் கும். இவற்றைத் தரிசித்து யாழ்ப் பாண மக்கள் அனைத்து நன் மைகளையும் பெற்று உய்ய வேண்டும். - என்றார்.

(ஐ)

இலங்கையில் முதல்முறை 3டி கமெரா சத்திர சிகிச்சை

இலங்கையில் முதல் முறை யாக3டிகமெராபயன்படுத்தப்பட்டு சத்திரசிகிச்சை ஒன்று வெற்றி கரமாகமேற்கொள்ளப்பட்டுள்ளது.

தைரொய்ட் கட்டி ஒன்றை நீக்கும் சத்திரசிகிச்சையே இவ் வாறு கொழும்பு தேசிய வைத் தியசாலையில்நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொண்டை, காது, மூக்கு தொடர்பான விசேட வைத்தியர் ரிஸ்னி சகாப் உட்பட வைத்திய குழுவினால்இந்தச்சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டாரவளைப் பிரதேசத் தைச் சேர்ந்த 42 வயது பெண் ஒருவருக்கு வாயில் கமெரா ஒன்றை நுழைத்து, ஒருவெட்டும் போடாமல் இந்த சத்திரசிகிச்சை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள் ளது.

3டி கமெரா தொழில்நுட்பத் தைப் பயன்படுத்தி இந்தச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள் ளது. இவ்வாறானதொழில்நுட்பத் தின்கீழ்இலங்கையில் மேற்கொள் ளப்பட்டமுதலாவதுசத்திரசிகிச்சை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

நாளை
29.04.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : சித்திரை பி.ப 2.23 வரை
திதி : சதுர்த்தசி கா. 6.54 வரை
சுபநேரம் : 8.58 – 10.28 வரை
இராகுகாலம் : 4.28 – 5.58 வரை

இலங்கையில் தனிநபர் வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் தனிநபர் வருமானம் கடந்த 2017 ஆம் ஆண்டில் 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது என இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் தனி நபர் வருமானம் 4 ஆயிரத்து 65 அமெரிக்க டொலராக இருந்துள்ளது.

இலங்கை ரூபா பெறுமதியில் இது 6 லட்சத்து 19 ஆயிரத்து 729 ரூபாவாகும்.

2016 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானம் 3 ஆயிரத்து 857 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தனிநபர் வருமானமானது 7.5 வீதமாக அதிகரித்துள்ளது.

மேலும் கடந்த ஆண்டில் வர்த்தக சந்தைவிலைகளுக்குஅமைய மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தியானது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 11.6 வீதமாக அதிகரித்துள்ளது. நிலையான விலைகளுக்கு அமைய மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தி 3.1 வீதமாக அதிகரித்துள்ளது.

உள்நாட்டு தேசிய உற்பத்தியில் கமத்தொழில், மீன்பிடி தொழில் என பன 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த ஆண்டில் 6.9 வீத பங்களிப்பை வழங்கியுள்ளன.

இதனை தொழிற்றுறை 26.8 வீத பங்களிப்பையும் சேவைத்துறை 56.8 வீத பங்களிப்பையும் மொத்த உள் நாட்டு தேசிய உற்பத்திக்கு வழங்கியுள்ளன என மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரைப்படத்தின் காட்சிகளை பார்வையிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 28

யசோதரா திரைப்படத்தின் விளம்பர திரைப்பட நிகழ்வில் (டிரெய்லர்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துக் கொண்டார்.

பேராசிரியர் சுனில் ஆரியரத்னவின் இயக்கத்தில் தயாரிக்கப்பட்டுள்ள 'யசோதரா பீம்பாதேவி' என்ற பௌத்த திரைப்படத்தின் காட்சிகள் வெள்ளவத்தையிலுள்ள திரையரங்கில் காட்சிப்படுத்தப்பட்டது.

இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ

உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தாதியியல் இளமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.28

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் தாதியியல் இளமாணி பட்டக் கற்கை நெறிக்குரிய (Bachelor of Science Honors in Nursing)2018/2019 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும்விண்ணப்பதாரிகள்www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 22.05.2018 இற்கு முன் விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென மேலும் தெரிவித்துள்ளார். (இ)

கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஏப்.28

பொலிகண்டி அரசம்புலம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி பதன்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவமும் மறுநாள் கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

விமல் வீரவன்சவின் ஆடம்பர விருந்து!

கொழும்பு, ஏப். 28

கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, ஆடம்பர விருந்து வைத்துள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி ஷங்கிரிலா ஹோட்டலில் 50 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணத்தைச் செலவிட்டு இந்த விருந்து நடத்தப்பட்டது எனக் குறிப்பிடப்படுகிறது.

2017ஆம் ஆண்டு சாதாரண தரப்பரீட்சையில் சித்தி பெற்ற தனது மகளுக்காக, வீரவன்ச விருந்து வைத்துள்ளார்.

இந்த விருந்தில் 800 பேர் கலந்து கொண்டுள்ளனர். ஷங்கிரிலா ஹோட்டலில் ஒரு வருக்கான உணவின் பெறுமதி 6 ஆயிரத்து 650 ரூபாவாகும். விருந்தில் கலந்து கொண்டவர்களின் உணவிற்கு மாத்திரம் 53 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

விருந்தின் பின்னர் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி விமல் வீரவன்ச உட்பட குடும்பத்தினர் கதிர்காமம் கோயிலுக்கு சென்று மகளின் பரீட்சைக்காக செய்த நேர்த்திக் கடனை நிறைவேற்றினர் என்றும் இந்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

நீதிமன்ற வழக்கு திகதியில் மாற்றம்

சாவகச்சேரி,ஏப்.28

எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி பொது விடுமுறை தினம் என அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் அன்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றில் அழைப்பதற்கு திகதி வழங்கப்பட்ட வழக்குகள் யாவும் ஜூன் மாதம் 4 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளதாக நீதிமன்றில் பதிவாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

7 ஆம் திகதியை பொதுவிடுறையை நிர்வாக சேவைகள் அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

முல்லைத்தீவில் மலேரியா பரவும் அபாயம்!

முல்லைத்தீவு , ஏப். 28

முல்லைத்தீவு மாவட்டத்தில், மலேரியாக் காய்ச்சல் பரவும் சாத்தியக்கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன என இந்த மாவட்டத்தின் மலேரியாத் தடுப்பு இயக்கத் தின் வைத்தியப் பொறுப்பதிகாரி வி.விஜிதரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டப் பிராந்தி சுகாதாரத் திணைக் களப் பணிமனை மண்டபத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில், மலேரிய நுளம்பு முற்றாக அழிக்கப்பட்டு விட்டாலும், அது முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவும் சாத்தியக்கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்ற குளங்கள், ஆறுகள், நீர் ஓடைகளிலேயே, மலேரியாவைப் பரப்பக்கூடிய அனோபிலிஸ் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களாகக் கணிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து, இந்தியாவுக்குச் சென்றுவரும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்றால், அதற்குரிய தடுப்பு மருந்துகளை ஏற்றிக்கொள்ளலாம். மக்கள் நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்குச் செல்வதாக இருந்தால், தடுப்பு மருந்தை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

விசாக நோன்மதி காலத்தில் புத்த பெருமானின் சாரணாத் புனித பொருள்களை தரிசிக்க வாய்ப்பு

கொழும்பு, ஏப். 28

இந்த ஆண்டிற்குரிய விசாக நோன்மதியை முன்னிட்டு இந்தியாவில் இருந்து புத்த பெருமானின் புனித பொருள்கள் இலங்கைக்கு எடுத்து வரப்படவுள்ளன.

சாரணாத்தில் இருந்து கொண்டு வரப்படும் புனிதப் பொருள்கள் நாளை மறுதினம் தொடக்கம் எதிர் வரும் புதன்கிழமை வரை அலரி மாளிகையில் அடியார்களின் தரிசனத்திற்காக வைக்கப்படும்.

சாரணாத் புனித பொருள்கள் இலங்கைக்குக் கொண்டுவரப் படும் முதல் சந்தர்ப்பம் இது வாகும். இதற்குத் தேவையான ஒழுங்குகளை இந்திய அரசாங்கம் பூர்த்தி செய்திருந்தது.

சாரணாத்தில் உள்ள மூல கந்தக்குடி விகாரையில் புத்தபெருமானின் புனிதப் பொருள்கள் அடியார்களின் தரிசனத்திற்காக வைக்கப்பட்டிருந்தன.

மகாபோதி சங்கத்தின் ஸ்தாபகரான அமரர் அநாகரிக தர்மபால இந்த விகாரையைப் புனரமைத்து, சாரணாத்தின் பெருமையை உலகறியச் செய்வதில் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை என இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

(க)

சிகரெட்டுகளுடன் சீனப் பெண் கைது!

கொழும்பு, ஏப். 27

சட்டவிரோதமான முறையில், வெளிநாட்டு சிகரெட்டுகளை இலங்கைக்கு கொண்டுவந்த சீனப் பெண் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வருகை தந்த விமானத்திலிருந்து இறங்கிய இந்தப் பெண், விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்டபோதே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப்பெண்ணிடமிருந்து டுபாய் தயாரிப்பிலான 20 ஆயிரத்து 980 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை அரசுடைமையாக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தினசரி ராசி பலன் (28.04.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 15 ஆம் நாள் சனிக்கிழமை திரியோதசித்திதி. காலை 7.12 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: அத்தம் பகல் 1.52 மணி வரை. பின்னர் சித்திரை. மரணயோகம் முழுவதும்.

ராகுகாலம் - காலை 9.02 மணி முதல் 10.35 மணி வரை.
சுபநேரம் - பிற்பகல் 2.54மணி முதல் 4.24 மணி வரை.
திவசம் செய்ய வேண்டிய திதி - சித்திரை மாத வளர்பிறை சதுர்த்தசி.
பிறந்த நட்சத்திர வழிபாடு - அத்தம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

மேஷம்

ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். உறவினர்களுடன் இருந்த பகைகள் தீரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். திருமண முயற்சிகள் கைகூடும். இதுவரை வாட்டி வதைத்த நோய்கள் நீங்கும்.

ரிஷபம்

அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் பெண்களுக்கு ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும். கோபமாய் இருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும்.

மிதுனம்

சலனம் மிகுந்த நாள். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளால் தொல்லை உண்டாகலாம். குடும்பத்தில் சிறு சச்சரவுகள், வாக்குவாதங்கள் ஏற்பட இடமுண்டு. சகோதர வழியில் மனக் கசப்பு ஏற்படலாம்.

கடகம்

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் குறைந்த பட்சலாபம் கிடைத்து வரும். பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பெரும் பளுவை ஏற்க நேரும்.

சிம்மம்

நன்மையான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பெண்களுக்கு விரும்பிய ஆடை, அணிமணிகள் சேரும். இதுவரை பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் சேரும் வாய்ப்புண்டு.

கன்னி

உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். அரச காரியங்கள் அனுகூலமாகும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவார்கள்.

துலாம்

யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். மறைமுக எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழிலில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

விருச்சிகம்

இன்பமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். புத்திசாலித் தனத்தால் சில அரும் பெரும் காரியங்களை நிறைவேற்றுவார்கள். கடன்கள் அடைபடும்.

தனுசு

சமபலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தில் குறைந்த லாபம் கிடைக்க வாய்ப்புள்ளதால் பொருளாதார நிலையில் அதிருப்தி தோன்றும். தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

மகரம்

நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பகையாய் இருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். வீடு, வாகன யோகம் உண்டாகும்.

கும்பம்

குழப்பமான நாள். வருமானம் குறைவடையும். குடும்பத்தில் சஞ்சலநிலை காணப்படும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். தொழிலில் பாடுபட்டதன் பலன் குறையும்.

மீனம்

விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். வியாபாரம் விருத்தியடையும். செய்தொழிலில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும்.

சந்திராஷ்டம நாள்: அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

மன உறுதிமிக்கவர்கள் இரணைதீவு மக்கள் அவர்கள் நில மீட்புப் போராளிகளே!

முன்னாள் எம்.பி. சந்திரகுமார் பாராட்டு

மக்களின் உறுதி இவ்வாறு போராடும் மக்களுக்கு ஒரு முன்னுதாரணம். எனத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்.

இரணைதீவு மக்களின் மனவுறுதியை நான் பாராட்டுகிறேன். அத்தோடு மக்களின் போராட்டத்தை தங்களின் அரசியலாக்கி அதில் அரசியல் இலாபம் தேடுபவர்களுக்கும் இந்த மக்களின் போராட்டம் ஒரு நல்ல படிப்பினையை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த காலத்தில் நாடாளுமன்றம் உட்பட பல இடங்களில் இந்த மக்களுக்காக நான் குரல் கொடுத்திருக்கிறேன். ஆனாலும் நாங்கள் நினைத்தது போன்று எதுவும் நடக்கவில்லை. இன்று இந்த மக்கள் இரணைத்தீவில் வந்து குடியேறியிருக்கின்றமைக்குக் காரணம் எந்த அரசியல் வாதிகளும் அல்லர் மாறாக இந்த மக்களின் உறுதியான போராட்டத்தின் விளைவே அது எனவும் தெரிவித்தார்.

(இ-70)

இரணைதீவிற்கு சென்று அங்கு குடியேறிய மக்களை நான் சொந்த நிலத்தை மீட்ட மக்களாகவே பார்க்கின்றேன் என முன்னளா நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மக்களின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும வகையில் நேற்றுமுன்தினம் இரணைத்தீவுக்கு சென்ற அவர் அங்கு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இரணைதீவு மக்கள் தங்களின் மண்ணை மீட்கும் போராளிகளாக காணப்படுகின்றனர். அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தங்களின் பல பிரச்சினைகளுக்கு தாங்களாகவே போராட்டங்களை நடத்தி வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

கேப்பாபிலவு, கிளிநொச்சி பரவிப்பாஞ்சான், வலி வடக்கு போன்ற இடங்களில் மக்கள் தாங்களே தங்களின் சொந்த நிலத்திற்கு செல்வதற்கான போராட்டத்தை மேற்கொண்டு அதில் கணிசமான வெற்றியையும் பெற்றிருக்கின்றார்கள்.

அவ்வாறே இரணைத்தீவு மக்களும் ஒரு வருடமாக இரணைமாதாநகரில் சொந்த நிலத்திற்குச் செல்வதற்கான போராட்டத்தை மேற்கொண்டார்கள். இந்தக் காலத்தில் பல அமைச்சர்கள் அரசியல் வாதிகள் என பலர் வந்து பல வாக்குறுதிகளை வழங்கினார்கள். ஆனால் அவர்கள் எவரும் இந்த மக்களின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை. இந்த நிலையில் மக்கள் நம்பிக்கையோடும் உறுதி தளராதும் தங்களின் சொந்த நிலத்திற்கு வந்து நிலத்தை மீட்டு குடியேறிக் கொண்டிருக்கின்றார்கள் எனவே அவர்களை பாராட்ட வேண்டும். இரணைத்தீவு

வெசாக் மகோற்சவம் இன்று ஆரம்பம்!

அரச வெசாக் மகோற்சவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பங்களிப்புடன் குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய தேவகிரி மஹா விகாரையில் இன்று இடம் பெறுகிறது.

இதனை முன்னிட்டு ரஜ மஹா விகாரை வெகு சிறப்பாக அலங்கரிக்கப் பட்டுள்ளது.

இம்முறை விகாரை மாத்திரமன்றி அரச, தனியார் நிறுவனங்களும் பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. வீதிகளில் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன.

அரச வெசாக் மகோற்சவத்துடன் இணைந்ததாக தான, தர்ம, தியான நிகழ்ச்சிகள் ஏற்படாகியுள்ளன.

விசாக நோன்மதியை முன்னிட்டு அரசு, தேசிய வெசாக் வாரத்தை பிரகடனப்படுத்தியிருந்தது. வெசாக் வாரம் நேற்றுமுன் தினம் ஆரம்பமானது.

இதற்குரிய நிகழ்ச்சிகள் மே மாதம் இரண்டாம் திகதி வரை நடைபெறும். அரச வெசாக் மகோற்சவத்துடன் இணைந்ததாக ஞாபகார்த்த முத்திரையும், அற நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

குருநாகல் மாவட்டம் முழுவதும் ஆன்மிக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமுலாகின்றன. மொத்தமாக 300 அறநெறி பாடசாலைகளும், 250 விகாரைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரியில் இன்று சிறப்புப் பட்டிமண்டபம்

சாவகச்சேரி, ஏப்.28

தென்மராட்சி இலக்கிய அணி, ஸ்ரான்போட் கல்வி நிறுவனம் மற்றும் தென்மராட்சியின் பொது அமைப்புக்கள் இணைந்து முன்னெடுக்கும் கவிஞர் த.நாகேஸ்வரனின் மணிவிழாவும், அரங்கில் பொழிந்த அமுத மழை நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும். சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வை பேராசிரியர் கந்தசாமி தம்பதியினர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர்.

நிகழ்வின் இறுதியில் "மாணவர்களின் எதிர்கால வெற்றிக்கு தாய் மொழிக் கல்வி ... அவசியமா? அல்லது அவசியமற்றதா?" என்ற தலைப்பில் சிறப்புப் பட்டிமண்டபம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

தாய் மொழிக் கல்வி அவசியம் என பேராசிரியர் தி.வேல்நம்பி, அ.வாசு தேவா ஆகியோரும் அவசியமற்றது என விரிவுரையாளர் ச.லலீசன், இ.சர்வேஸ்வரா ஆகியோரும் வாதிடவுள்ளனர். பட்டிமண்டப நடுவராக கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் கடமையாற்றவுள்ளார். நிகழ்வில் அனை வரையும் கலந்து கொள்ளுமாறு விழாக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(இ-21)

இலங்கையின் ரூபா மதிப்பு வீழ்ச்சி தொடர்பாக நியாயப்படுத்துகின்றார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஏப். 28

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, ஏனைய பல நாடுகளிலும் இதே நிலையே இருக்கிறது என்றவாறாக பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த ஆண்டில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை

ரூபாவின் மதிப்பு 2.9 வீதத்தினால் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாவின் மதிப்பும் 4.8 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாணயத்தின் மதிப்பு 4.4 வீதத்தினாலும், ஆஸ்திரேலிய டொலரின் மதிப்பு 2.7 வீதத்தினாலும், இந்தோனேசிய நாணயத்தின் மதிப்பு 2.4 வீதத்தினாலும் சரிவு கண்டுள்ளன.

இவ்வாறு நாணய மதிப்பு குறைந்துள்ளதால், வெளி நாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தும் போது அதிகளவு நிதியை செலுத்த வேண்டியிருக்கும் என்று கூறுகிறார்கள்.

ஆனால், அப்படியல்ல. நாங்கள் அமெரிக்க டொலரில் தான் கடன்களைத் திருப்பிச் செலுத்துகிறோமே தவிர, இலங்கை ரூபாவில் அல்ல என்றும் தெரிவித்தார்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க, பொருளாதாரம் மற்றும் கணிதம் தொடர்பாக சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் தான் இப்படி தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(க)

'தளவாசல் – 4' அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.28

கலை, இலக்கிய, சமூக, பண்பாட்டுக் காலாண்டிதழான 'தளவாசல் – 4' அறிமுக நிகழ்வு நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் சிறப்புரை: மருத்துவர் சி.ஞானகுமாரவேல், அறிமுக உரை: ந.மயூரரூபன் (பிரதேப்பாளர்). கருத்துரை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர்; தி.செல்வமனோகரன். ஏற்புரை: கை.சரவணன். நன்றியுரை: சி.நிசாகரன். (இ)

மின் தடை

யாழ்ப்பாணம், ஏப்.24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிறு காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை –

கிளிநொச்சிப் பிரதேசத்தில் – கிளிநொச்சி நகரம், திருநகர், மக்கள் வங்கி கிளிநொச்சி, மாவட்ட செயலகம் கிளிநொச்சி, லங்கா சதொச கிளிநொச்சி, cargills food city கிளிநொச்சி, நீர்ப்பாசன சபை, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலும் – மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

சிவனொளிபாத சுத்திகரிப்பில் மத்திய பாதுகாப்பு படையினர்!

கொழும்பு, ஏப். 28

மத்திய மாகாண பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 11ஆவது பாடைப் பிரிவின் கீழ் இயங்கும் 112 படைப்பிரிவின் 19 ஆவது இலங்கை இராணுவ தேசிய பாதுகாப்பு படையணியின் படையினரால் மத்திய பிரதேசத்தின் சூழல், விவசாய திணைக்களம் போன்ற இடங்களில் சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொண்டமையுடன், சிவனொளிபாதமலையிலும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்தப் பணிகளில் தேசிய பாதுகாப்பு படையணியின் 3 அதிகாரிகள் உட்பட 50 படையினர் மத்திய பிரதேசத்தின் அரசாங்க அதிகாரிகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டு இந்தப் பணிகளை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

கராபிட்டிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிபுறக்கணிப்பு

கொழும்பு, ஏப். 28

காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்றுக் காலை 7 மணி முதல் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இங்கிலாந்து நாட்டு வைத்தியரான ரிச்சட் பர்மினுக்கு மீண்டும் காலி - கராபிட்டிய வைத்தியசாலையில் இதய அறுவை சிகிச்சை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பணிப் புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

பணி புறக்கணிப்பு காரணமாக வெளிநோயாளர் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை நிறுத்தப்பட்டுள்ளநிலையில் அவசர அறுவை சிகிச்சை மாத்திரம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

மலையக ரயில் சேவைகள் பாதிப்பு

பதுளை, ஏப். 28

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இரவு தபால் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளதால் மலையக ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் நாவலப்பிட்டி மற்றும் உலப்பனை ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் பல்லேகம எனும் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தடம் புரண்டுள்ளது என நாவலப்பிட்டி ரயிவே அதிகாரிகள் தெரிவித்தனர். ரயிலின் மூன்று பெட்டிகளே இவ்வாறு தடம் புரண்டுள்ளன.

எனினும் அதில் பயணித்த பயணிகளையும், தபால் கடிதங்களையும் வேறொரு ரயிலுக்கு மாற்றி அனுப்பி வைக்கப்பட்டன என நாவலப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

ரயில் தடம் புரண்டதை அடுத்து சில மணி நேரம் பயணிகள் போக்குவரத்து சிக்கல்களை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ரயில் பாதையை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அதன்பின் மலையக ரயில் சேவைகள் பாதிப்பில்லாமல் தொடரும் என்றும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

(க)

கல்வி அமைச்சில் விளையாட்டு போட்டி

கொழும்பு, ஏப். 28

தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சில் புதுவருட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

புதுவருட விளையாட்டுப் போட்டிகள் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ். இராதாகிருஷ்ணனின் தலைமையில் இடம் பெற்றது.

இந்த விளையாட்டு போட்டியில் மரதன் ஓட்டம், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், யானைக்கு கண் வைத்தல், கிரிஸ் மரம் ஏறுதல், தடைதாண்டி ஒட்டம் போன்ற விளையாட்டுகள் நடைபெற்றன.

இந்த விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை கல்வி இராஜாங்க அமைச்சர் வழங்கினார்



முகாமைத்துவப் பட்ட கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.28

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் முகாமைத்துவப்பட்ட கற்கை நெறிக்கான (Bachelor of Management Studies - BMS) தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய பரீட்சை மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை கடந்த 11.03.2018 அன்று நடத்த திட்டமிடப்பட்ட போதும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு மீண்டும் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை www.ou.ac.lk எனும் இணைத்தள முகவரியூடாகப் பெற்று அதனை உறுதிப்படுத்திய பின் பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ)

காலைக்கதிர் Kalaikkathir

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின்

‘யுஎஸ்எயிட்’ நிதியில் ஐந்து ஆண்டுத் திட்ட சமூக அபிவிருத்தி பணிகள்

ஒத்துழைப்பு வழங்கிய நிறுவனங்கள், அதிகாரிகளுக்கு விருது வழங்கி கௌரவிப்பு

யாழ் சமூக செயற்பாட்டு மையமானது USAID நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அமுலாக்கம் செய்து கொண்டிருக்கின்ற 5வருடத் திட்ட நிறைவுக்கு கொண்டுவருவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நகர் அன்று சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக USAID நிறுவனத்தின் அரசு மற்றும் நலிவுற்ற மக்களுக்கான காரியாலய பிரதி அலுவலக பணிப்பாளர் அலென் டான்சி பங்கெடுத்ததுடன் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும் பங்கெடுத்தார்.

இத்திட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் 9 பிரதேச செயலகங்களுடனும் தெல்லிப்பளை, கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, அம்பன், கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி, முசலி 61 கிராமசேவகர் பிரிவுகளிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கம் செய்யப்பட்டு வந்தமையால், எம்முடன் தொடர்ந்து பயணித்த பிரதேச செயலர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மாவட்ட இணைப்பாளர், மீன்பிடி மற்றும் நீரியல் திணைக்கள பணிப்பாளர்கள், மீன்பிடி கண்காணிப்பு உத்தியோகத்தர்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில், தனிப்பட்ட உதவித்திட்டம் வழங்கப்பட்ட 1000 பயனாளிகளின் 7 பேருக்கான இறுதிக்கட்ட பொருள்கள் அவர்களது முயற்சியாண்மை திட்டத்திற்காக வழங்கப்பட்டன.

இத்திட்டமானது திராட்சை, முந்திரிகை, கொடித்தோடை, பப்பாசி, மரக்கறி பயிர்ச்செய்கை, மீன்பிடி உபகரணங்கள், முயற்சியாண்மை உதவிகள், ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை பயிற்சி மற்றும் வேலை, மீன் விற்பனைஏலக்கூடம், மீனவர் ஓய்வு மண்டபம், பல நோக்கு மண்டபம், அரைநிரந்தர வீடுகள், மலசலகூடம் ஆகியன அமைத்தல் மற்றும் விவசாய கிணறுகள் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு என விரிவடைந்து காணப்பட்டன.

திட்ட நிறைவுக்கான உத்தியோகபூர்வ அறிவித்தலானது யாழ் சமூக செயற்பட்டு மையத்தின் இணைப் பாளரினால் அறிவிக்கப்பட்டதுடன், எமது நிறுவனத்துடன் தொடர்ந்து அயராது பணிபுரிந்த அரச திணைக்களங்கள் கௌரவிக்கப்பட்டது. அந்த வகையில் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு விருது வழங்கப்பட்டன.

மேலும், மீளக்குடியமர்ந்த மக்களின் நலிவுற்ற நிலையை அறிந்து 254 மில்லியன் பெறுமதியான திட்டத்தை, எமது நிறுவனத்திற்கு கொடுத்து 10000 தனி நபர்கள் பாதுகாப்பானதும் வாழ்வாதாரத்தை பெற்ற நிலையிலும் காணப்படுவதற்கு உறுதுணையாக இருந்த USAID நிறுவனத்தையும் யாழ் சமூக செயற்பாட்டு மையம் கௌரவித்திருந்தது.

மேலும் பிரதம அதிதி எம்மால் தெல்லிப்பளை பிரதேசத்தில்வழங்கப்பட்ட உதவித் திட்டங்களை சென்று பார்வையிட்டிருந்தார். அவர்பளை வீமன் காமம் வடக்கு, தையிட்டி, பலாலிகிழக்கு, வயாவிளான் கிழக்கு பிரதேசங்களில் புனரமைக்கப்பட்டு விவசாய கிணறுகள் மற்றும் காலி வைகள், முயற்சியாண்மை திட்டஉதவிகள், திராட்சை பயிர்ச்செய்கை, தூவல் நீர்ப்பாசன திட்டங்கள் என்பவற்றைப் பார்வையிட்டிருந்தார் என்றும் சமூக செயற்பாட்டு மையன் அறிவித்துள்ளது. (இ)

யாழ். திருக்குடும்ப சனசமூக நிலையம் தமிழ் சிங்கள புதுவருட விளையாட்டு விழாவும் பரிசளிப்பும் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக பல்கலைக் கழக பகுதி நேர ஆங்கில விரிவுரையாளர் பத்மாகரனும் இவ் வட்டார மாநகர பிரதி நிதி திருமதி மேரி அஞ்சலாவுடன் பரிசு பெறும் சிறுவர்கள் பெரியோர்களையும் காண்கிறீர்கள்.

யாழ். திருக் குடும்ப கன்னியர் மட சனசமூக நிலையத்தில் மாண வர்களுக்கான மாலை நேரக் கல்வியை ஊக்கப் படுத்தும் நிகழ்வில் அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளாருடன் எழுத்தாளர் யோசப்பாலாவும் மாணவர்களுடன் கூடி மகிழும் காட்சி. (இ)

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால்

நிறைவு செய்யப்பட்ட கருத் திட்டங்கள் கிளி. மாவட்ட மக்களுக்கு கையளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் நல்லிணக்க அமைச்சினால் கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் அமைச் சர் என்ற வகையில் அவரின் வழிகாட்ட லின் கீழ் பல்வேறுபட்ட நிறைவுசெய்யப்பட்ட கருத் திட்டங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் மக் கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் 26 ஆம் திகதி கையளிக்கப்பட்டன என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவ ஞானசோதி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்மாதம் 26 ஆம் திகதி ஊற்றுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் புனித திரேசா பாடசாலைகளில் ஸ்மாட் வகுப்ப றையும், உதயநகர் மேற்கு கரைச்சிப் பிரதேச சபைப் பகுதியில் கொங்கிறீட் பாதையும், இந்து இளைஞர் சபை வீதி யும், உருத்திர புரம்பகுதியில் தாரிடப்பட்ட வீதியும், வட்டக்கச்சியில் புதிய பால இணைப்பு வீதியும் கையளிக்கப்படன.

அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தகவல்

அதற்கான மொத்த கிரயம் 25.9 மில் லியன்களாகும்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப் பினரும், நாடாளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுத் தலைவரு மான மாவை சேனாதிராசாவும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதியும் நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறீதரனும் மற்றும் ஏனைய முக்கிய அரசியல் பிரமுகர்களும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மேலும் பிராந்திய சுகாதாரப் பணிப் பாளர் அலுவலகத்தின் அதிதீவிர சிகிச் சைப் பிரிவினை மேம்படுத்துவதற்காக ICU ventilator, portable ventilator, video laryngoscope என்பன கொள் வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற் கான மொத்தக்கிரயம் ரூபா 9.5 மில்லி யன் என வும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலகப்பிரிவில் பின் தங்கிய பிரதேசங்களாகவுள்ள பாட சாலை மாணவர்களுக்கு 220 துவிச்சக் கர வண்டிகள் ரூபா 3.5 மில்லியனிலும் வாழ்வாதார உதவிகள் ரூபா 15 மில் லியனிலும் கையளிக்கப்பட்டன.

இவை தவிர 2018 ஆம் ஆண்டில் கரைச்சி சுகாதாரப் பிரிவின் மாவட்ட வைத்தியசாலைக்கு ரூபா 38 மில்லி யன்செலவில் Laparoscopy machine, Digital Plain Radiograph machine, Dental X-Ray machine ஆகிய வைத்திய உப கரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சுகாதார வசதிகள் மேம் படுத்தப்பட்டன.

மேலும் வளர்மதி இறங்கு துறையும் இரணைமாநகர் இறங்குதுறையும் நானி மட கடலுணவு விற்பனைநிலையமும் ரூபா.7.5 மில்லியன் செலவில் 2018 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படவுள் ளன. அத்துடன் பனைசார் உற்பத்தி களை அதிகரிப்பதற்கான உணவு உற் பத்தி நிறுவனத்திற்கு ரூபா. 20 மில்லி யனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

(இ)

நாட்டையும், வீட்டையும் அழிக்க உருவெடுத்துள்ள நவீன 'அரக்கன்' போதைப் பொருளே!

போதை என்ற இரு எழுத்தில் உலகமே தள்ளா டும் போது அதில் சிக்காமல் விட இலங்கை விதிவிலக்கல்ல. சமூகத்தை அழிக்கும் அரக்கனாகதற்போதுபோதைப் பொருள் உருவெடுத்துள்ளது.

ஆயுதப் போருக்கு முடிவு கண்டு விட்டோம். அரசியல் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடும் என்று அரசு கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் இன்று மாற்று வடிவில் உருவாகியிருக் கும் உயிர்க் கொல்லிப் போர் தான் போதைப்பொருள்.

நிச்சயம் இதனால் செத்து மடிவது பல கோடி மக்களாக இருக்கும் என்பதற்கு மாற்று கருத்து எதுவும் இல்லை. எமது நாகரிகம் வளர்ச்சிப்பாதையில் செல்கின்ற அதே தருணத்தில் தொன்று தொட்டு விளங்கி வரும் சில தீய பழக்கங்கள் தொடர்ந்தும் நலிவடையாமல் வலிமை பெற்றுச் செல்கின்றன.

போதைப் பொருள் பாவனை இன்று ஆறு தொடக்கம் அறுபது வரை வேரூன்றி நிற்பது கவலைக்குரிய விடயமே. நாட் டின் இன்றைய சூழலில் இந்த நச்சு அம்பு உயிர் கொல்லியாகச் செயற்பட்டு வருகின்றது. இலங்கையில் போதை பொருள் பாவனை காரணமாக விப சாரம்,கொலை, கொள்ளை, வன்பு ணர்வு, களவு போன்ற பெரும் குற்றச் செயல்கள் பெருகிவருகின்றன .

இவ்வாறான நிலையில் நாட்டில் இருந்து போதைப் பொருள் பாவனை யையும் போதை பொருள்களையும் முற்றாக அழித்தொழிப்பதற்கு தீவிர மான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஒரு குடும்ப தலைவன் போதை பொருளுக்கு அடிமையாகி இருந்தால் குடும்பத்தில் உள்ள ஏனைய நபர்களும் அதன் விளைவாக பாதிக்கப்பட்டு சமுதாய சீரழிவுகளுக்கு உள்ளாக்கப்பட வேண் டியவர்களாக இருக்கின்றார்கள்.

இன்று வர்த்தக ரீதியில் உலகெங்கும்

போதைப் பொருள்கள் சந்தைப்படுத்தப் படுகின்றன. சட்டவிரோதமான கடத்தல் போன்ற வழிகளிலேயே இவ்வர்த் தகம் நடைபெறுகின்றது.

தற்போது நவீன உருவிலும், எளிமை யான முறையிலும் போதைப் பொருள் கள் தயாரிக்கப்படுகின்றன. மிகச் சிறிய அளவு பாவிப்பதன் மூலம் அதிகளவு போதை தரக்கூடியதாக அவை தயாரிக் கப்பட்டுள்ளன.

மேலும், இவை இலகுவாக கடத்தவும் பரிவர்த்தனை செய்யவும் வாய்ப்பாக அமைந்துள்ளன. வெளிநாடுகளில் தயா ரிக்கப்பட்ட ஹெரோயின், கொகேய்ன் போன்ற பல போதைப்பொருள்கள் மாத் திரை வடிவத்திலும் தயாரிக்கப்படுகின் றன. கடந்த காலத்தில் மது, கஞ்சா, அபின், ஹெரோயின் பாவனையில் இருந்து எமது சமூகம் விடுபட்டு வருகின்ற வேளையில் மிகக் கொடூரமான செயற் பாடாக போதை மாத்திரைகள் பாவிக்கப் படுகின்றன.

போதைப் பொருள் பாவிப்பவர்களை எளிதில் அறிந்து கொள்ள முடியாது, காரணம் அந்த அளவு தொழிநுட்பம் வளர்ந்து விட்டது. போதைப் பொருளை உடலிற் செலுத்திக் கொள்ளும் பழக்கம், தீவிர பாவனையாளரிடையே உள்ளது.

ஆபத்தின் உச்ச கட்டத்தில் இருக்கும்

அமைதி நல்லிணக்கம் எல்லாமே சிதைந்து அழிந்து விடும் நிலை

போது படிப்படியாக சில வருடங்களின் பின்னர்தான் இனம் கண்டு கொள்ள முடியும். இலங்கையின் உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணி கள் நவீன போதைப் பொருள்கள் நாட்டி னுள் பிரவேசிக்க வழி வகுத்தன.

பொலிஸ் விசேட படையினரால் மேற்கொள்ளப்பட்ட, ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றல் தொடர் பிலான 3 வருட கணக்கெடுப்பில், 2015 தொடக்கம் 2018.04.22 ஆம் திகதி வரையில் 75 மில்லியன் ரூபாய் பெறு மதியான ஹெரோய்ன் போதைப்பொருள் இதுவரையில் கைப்பற்றப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு 151 சுற்றி வளைப்புகளில், 169 பேர் கைது செய்யப் பட்டதுடன், 434 கிராம் அளவிலான ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் 85 சுற்றி வளைப்புகளில் 94 பேர் கைது செய்யப் பட்டுள்ளதுடன், 535 கிராம் ஹெரோய் னும், 2017 ஆம் ஆண்டில் 299 சுற்றி வளைப்புகளில், 317 பேர் கைது செய் யப்பட்டுள்ளதுடன், 5396 கிராமும் கைப் பற்றப்பட்டுள்ளன.

இவ்வாண்டு 2018.04.22 ஆம் தி கதி வரையில், 125 சுற்றிவளைப்புக ளுடன் 131 பேர் கைது செய்யப்பட்டுள் ளதோடு, 7414 கிராம் ஹெரோய்ன் கைப் பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸ் விசேடப் பிரிவினர் அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளனர்.

போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு போதைக்கு முற்றுப்புள்ளி திட்டம் மட்டுமேபோது மானதல்ல, சகல ரும் பூரண ஒத்துழைப்பின் மூலமே போதைப் பொருள் ஒழிப்பை வெற்றி கரமாக முன்னெடுக்க முடியும்.

போதைக்கு அடிமையானோரை அதி லிருந்து மீட்டெடுப்பது, இளம் சந்ததியி னரைப் பாதுகாப்பது என்ற இலக்கிலேயே அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தலைத்தூக்கியிருக்கும் போதைப் பொருள் பாவனை இலங்கைத் தீவை மீண்டும் அமைதி இழக்கச் செய்து சமூக கெடுமானங்களை உருவாக்கிநல்லிணக் கத்தையும் இன ஒற்றுமையையும் உடைத்துவிடும் நாசகார முயற்சியாகவே பயன் படுத்துவதற்கு காரணமாகலாம்.

கல்விக் கதிர் வெளியீடு

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

பகுதி - II

3) **கீழே தரப்பட்ட வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக?**

I. குருவி தனது குஞ்சுகளுக்கு உணவு ..... (ஊட்டியது/ ஊட்டின)

II. நேற்று..... விபத்து மிகவும் கொடூரமானது. (நடந்த /நடக்கும்)

III. நேற்றுமுன்தினம் விளையாட்டுப்போட்டிகள் மிகவும் விமரிசையாக. .....

(நடைபெற்றன/ நடைபெறும்)

4) **ஆண்பால் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக?**

மனைவியை இழந்த கணவனை தபுதாரன் என்று கூறினான்

.....

5) **பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக?**

I. மக்கள் +பேறு .....

II. இரண்டு+ நூறு .....

6) **கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி பூரணப்படுத்துக?**

உண்ணாச் சொத்து .....

7) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக?**

சூரியன் /அதிகாலையில் / எழுவது / உதிக்கும் /முன் /நல்லபழக்கம் / ஆகும்

.....

8) **கீழே தரப்பட்ட வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக?**

1.சுமன் அந்த புத்தகத்தை நுனிப்புல் மேய்வது போல் படித்தான். தடித்த எழுத்திலுள்ள மரபுத் தொடரின் கருத்து (முழுமையான ஈடுபாட்டுடன் படித்தல் / மேலோட்டமாகப் படித்தல்)

2. விதுவும் நிதாவும் நகமும் சதையும் போல் இருப்பார்கள்
(இணைபிரியாதநட்பு/ மிகுந்த பகை உணர்வுடன்)

9) **கீழுள்ள சொற்களில் காலப் பெயர் சொற்களைத் தெரிவு செய்க**
(காற்று, கண், நேற்று, வீடு, இரவு)

10) **கீழ்வரும் பாடலைப் பூரணப்படுத்துக**

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்க கருதவும் வேண்டா.....
.....
வாடி இருக்குமாம் கொக்கு

11) **ஒவ்வொரு உருவிற்குமுரிய பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக**



.....



.....

12) **கீழே தரப்பட்ட ஆங்கில வாக்கியங்களுக்கு வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக?**

1.How old ..... you ? (are \ is)

2. I ..... two pens (have \ has)

13) **பின்வரும் ஆங்கிலச் சொல் ஒவ்வொன்றிலும் விடுபட்டுள்ள எழுத்தைக் கண்டு பிடித்து எழுதுக**

1. Win.... ow

2.Senten...e

14) **பின்வரும் வாக்கியங்கள் ஆங்கிலத்தில்சொல்லப்படும் விதத்தை ஆங்கிலத்தில் எழுதுக?**

15) உங்களுக்கு என்ன வேண்டும்? .....

16) **பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக**

1. அஹன்ன .....

17) **பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் தருக**

பொல்தெல் கீயத ? .....

சிறுவர் பெய்கை

வெறுப்பது யாராக
இருந்தாலும் நேசிப்பது
நீங்களாக இருங்கள்...
– அன்னை தெரசா –

எதுவுமே இல்லை

ஒருவன் ஒரு ஜென் துறவியைக் காண வந்தான். அவரிடம், இவ்வுலகில் இப்போது புத்தர் இருக்கிறாரா? இல்லையே? எதுவுமே இல்லை என்பதில் தான் இருக்கிறது. அனைத்துமே வெற்றிடம் தான். யாரும் எதுவும் கொடுப்பதில்லை. எதுவும் பெறுவதில்லை. என்றான்.

உடனே அந்த துறவி அவனை தன்னிடமிருந்த ஒரு குச்சியால் ஒரு அடி அடித்தார்.

அவனுக்குக் கோபம் வந்து விட்டது.

எதுவுமே இல்லை என்றால் உனது கோபம் எங்கிருந்து வந்தது அப்பனே!, என்று கேட்டார் துறவி.

10 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்

தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிப் பொதுச் செயலாளர் பதவிக்கு நான் பொருத்தமற்றவன்- ருவான்

கொழும்பு, ஏப். 28

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவிக்கு தாம் பொருத்தமற்றவர் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தாம் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு அறிவித்துள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

என்னை விடவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவியை வழங்குமாறு கோரியுள்ளேன்.

இந்தப் பதவிக்காக வேறு பொருத்தமான ஒரு சிரேஷ்ட அமைச்சரை நியமிப் பதற்கு எவ்வித எதிர்ப்பையும் வெளியிடப் போவதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியில் எந்தவொரு பதவியையும் பெற்றுக்கொள்ள நான் திட்டமிடவில்லை.

தற்பொழுது கட்சியை வலுப்படுத்த வேண்டியதே மிகவும் அவசியமானது.

இந்தப் பதவிக்கு பொருத்தமான கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் இருக்கின்றார் என நாம் கருதுகிறேன் என்றும் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

(க)

கொழும்பு நகரில் ஏற்பாடு செய்யப்படும் தானசாலைகள் குறித்து ஆராய 3 குழுக்கள்!

கொழும்பு, ஏப். 28

விசாக நோன்மதி தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரில் ஏற்பாடு செய்யப்படும் தானசாலைகளில் பரிமாறப்படும் உணவு குறித்து ஆராய்வதற்கு மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ருவன் விஜயமுனி தெரிவிக்கையில்-

கொழும்பு நகரில் ஏற்பாடு செய்யப்படும் தானசாலைகள் குறித்து தற்சமயம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பு நகருக்குள் மட்டும் சுமார் 100 தானசாலைகள் ஒழுங்கு செய்யப்பட இருக்கின்றன. இவற்றின் பெரும்பாலான தானசாலைகள் ஏற்கனவே கொழும்பு மாநகரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தானசாலைகளை பதிவு செய்வதற்கு தேவையான விண்ணப்பப் படிவங்களை கொழும்பு மக்கள் தொடர்பாடல் சுகாதாரத் திணைக்களத்திலோ அல்லது அதற்குரிய இணையத்தளத்தில் இருந்தோ பெற்றுக் கொள்ளலாம் என்று விஜயமுனி மேலும் தெரிவித்துள்ளார்.

(க)

விசாக தினத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவை!

கொழும்பு, ஏப். 28

விசாக நோன்மதி தினத்தில் யாத்திரைகளில் ஈடுபடும் பக்தர்களின் வசதி கருதி விசேட ரயில் சேவை இடம் பெறுவுள்ளது.

இதற்கமைவாக இன்று பிற்பகல் ஒரு மணிக்கு விசேட ரயிலொன்று கொழும்பு கோட்டையிலிருந்து அனுராதபுரம் வரை செல்லவுள்ளது.

விசாக நோன்மதி தினமான நாளை மாலை 6.40 அளவில் மற்றுமொரு ரயில் அனுராதபுரத்திலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை நோக்கிச் செல்லும்.

இதற்கு மேலதிகமாக விசாக நோன்மதி காட்சிகளை பார்வையிட விசேட ரயில் சேவைக்குத்திட்டமிடப்பட்டுள்ளது என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசாக நோன்மதி தினத்திலும் அதன் பின்னரான தினத்திலும் இந்த விசேட ரயில்வே சேவை இடம் பெறவுள்ளது.

களுத்துறை மற்றும் மருதானை, அளுத்கம மற்றும் மருதானை, அவிசாவலை மற்றும் கொழும்பு கோட்டை, ரம்புக்கனை மற்றும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் இந்த ரயில் சேவை இடம்பெறுவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்காக மணப்பெண் கோலத்தில் சென்றிருந்த பெண்!

கொழும்பு, ஏப். 28

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நேர்முகத் தேர்வுக்கு மணப்பெண் ஒருவரும் சமுகமளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தறையில் நடந்துள்ளது.

மாத்தறை மாவட்டம்கெட்டவலகமவில் வசிக்கும் பட்டதாரியான கே.ஆர். அமாலி ப்ரியதர்ஷன ஜயரத்ன

என்பவர் மணப்பெண் கோலத்துடன், மணம் முடித்த கணவருடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளித்திருந்தார்.

மணமகனின் வீட்டுக்குப் புதுத் தம்பதிகளை வரவேற்கும் வைபவத்தில் கலந்துகொள்ளும் நாளில் இந்தப் பெண்ணுக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையிலேயே மணப்பெண் கோலத்துடன், நேர்முகத் தேர்வுக்குச் சென்றார் என்று கூறப்படுகிறது.

தரமற்ற பௌத்த கொடி தொடர்பில் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 28

கம்பஹா நகரில் 10 வர்த்தக நிலையங்களில் இருந்த தரமற்ற பௌத்த கொடிகளை நுகர்வோர் அதிகார சபை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டது.

விசாக நோன்மதி தின காலப்பகுதியில் தரமற்ற பௌத்த கொடிகள் விற்பனை செய்யப்படுகின்றன என பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தியுள்ளது தகவல் அறியும் சட்டம்

கொழும்பு, ஏப். 28

தகவல் அறியும் சட்டம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தியுள்ளது என நிதி மற்றும் தகவல் ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் லஸந்த அழகியவண்ண தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை பிரதி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தச் சட்டமூலத்தை மேலும் யதார்த்தமாக்கும் வகையில், இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமூட்டும் விசேட வேலைத்திட்டம் ஒன்று தற்சமயம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் குறித்து பொதுமக்கள் எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(க)

வவுனியாவில் மாபெரும் இரத்ததான முகாம்

வவுனியா, ஏப்.28

வவுனியா பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது எனப் பிரஜைகள் பொலிஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த முறை இடம்பெற்ற இரத்ததான முகாமிற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களும் இளைஞர்கள், யுவதிகளும் பெருமளவில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(இ)

நுவரெலியாவில் இன்று குதிரைப் பந்தயப் போட்டி

றோயல் குதிரைக் கழகத்தினால் கோடை காலத்தில் நடத்தப்படும் குதிரைப் போட்டிகளின் முதலாம் கட்டத்திற்கான ஆளுநர் வெற்றி கிண்ணப் போட்டி குதிரைப் பந்தயத் திடலில் இன்று நடைபெறவுள்ளது.

1926 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட ஆளுநர் வெற்றிக் கிண்ணப் போட்டி தொடர்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையிலானோர் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதற்கு பெரும் எண்ணிக்கையிலானோர் வருகை தருவார்கள் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

பள்ளிக்கு செல்ல மறுத்தார் சிறுமி; மோ. சைக்கிளில் கட்டி அழைத்துச் சென்றார் தந்தை!

சீனாவில் பாடசாலை செல்ல மறுத்த சிறுமியை அவரது தந்தை தனது மோட்டார் சைக்கிளின் பின்னால் கட்டி வைத்து அழைத்துச் சென்ற காட்சிகள் வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தந்தையின் மோட்டார் சைக்கிளின் பின்னால் பிணைக்கப்பட்ட சிறுமியின் கால்கள் ஆபத்தான முறையில் தொங்கியபடியே சென்றது.

சமூக வலைத்தளங்களில் வைரலான இந்த வீடியோவை அடுத்து அந்த நபரைக் கைது செய்த பொலிஸார் எச்சரித்து அனுப்பியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸாரிடம் அந்த நபர், தமது மகளைப் பாடசாலைக்கு அனுப்புவதே மிகவும் கடினமான காரியமாக உள்ளது. தினமும் அவளுடன் மல்லுக்கட்டியே பாடசாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது.

சில நாட்களில் அவளை கட்டாயப்படுத்தி இழுத்துச் சென்றால் தான் உரிய நேரத்தில் பாடசாலை செல்ல முடியும். அதுபோன்றே சம்பவத்தன்று அடம் பிடித்த அவளை மோட்டார் சைக்கிளில் கட்டிவைத்து பாடசாலைக்கு அழைத்துச் செல்ல நேர்ந்தது எனத் தெரிவித்துள்ளார்.

எதுஎவ்வாறு இருப்பினும் இதுமிகவும் மோசமானசெயல் என இணையத்தளங்களில் பலர் விமர்ச்சித்துவருகின்றனர்.

ஜனாதிபதி ட்ரம்ப் ஜூலையில் பிரிட்டன் செல்கிறார்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜூலை மாதம் பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் எண் 10, டவுனிங் தெருவில் பிரதமரின் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பிரதமர் அலுவலகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜூலை மாதம் 13 ஆம் திகதி பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

பிரிட்டன் செல்லும் ஜனாதிபதி ட்ரம்ப் பிரதமர் தெரசா மேவை சந்தித்து பேசவுள்ளார். அப்போது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் பேச்சு நடத்தவுள்ளார். இதுகுறித்த விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் விரைவில் பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன் என பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானை விட்டு வெளியேற அமெ. தூதரக அதிகாரிக்குத் தடை

இஸ்லாமாபாத், ஏப்.2

அமெரிக்க தூதரக அதிகாரியின் கார், மோட்டார் சைக்கிள் ஓட்டிய நபர் மீது மோதி விபத்தில் உயிரிழந்தமை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் பாகிஸ்தானை விட்டு அவர் வெளியேற தடை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் அதிகாரியாக பணி ஆற்றுபவர் கேணல் ஜோசப் இமானுவேல் ஹால். சமீபத்தில் இவர் ஓட்டிச்சென்ற கார், பாகிஸ்தானியர் ஒருவரின் மீது மோதியது. இதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிய அதீக் பெய்க் (வயது 22) உயிரிழந்தார். அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் படுகாயங்களுடன் உயிர் தப்பினார்.

உயிரிழந்தவரின் தந்தை அமெரிக்க தூதரக அதிகாரியைக் கைது செய்து அவர் மீது வழக்கு தொடர்ந்து விசாரிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

ஆனால் தூதரக அந்தஸ்து காரணமாக கைது செய்வதில் இருந்து அவர் விலக்கு உரிமை பெற்று உள்ளார் என

அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

பாகிஸ்தானிய ஊடகங்களில் ஜோசப் இமானுவேல் ஹால் குடிபோதையில் வாகனம் ஓட்டிச்சென்றுதான் விபத்தை ஏற்படுத்தினார் என செய்திகள் வெளியாகின. ஆனால் அதை அமெரிக்க தூதரகம் மறுத்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் துணை அட்டோர்னி ஜெனரல் ராஜா கலித் மகமது, இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆனார். அவரும், பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஜோசப் இமானுவேல் ஹால் மீது வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்த முடியாது. அவருக்கு தூதரக அதிகாரி என்ற முறையில் விலக்கு உரிமை உள்ளது. ஆனால் அவர் நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்து கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டார். பாகிஸ்தான் விமான நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டு விட்டன என்று கூறினார்.

சவூதியில் 2014 முதல் இதுவரை 600 பேருக்கு மரண தண்டனை!

ரியாத், ஏப். 28

இந்த வருடம் இதுவரையில் மட்டும் 48 பேருக்கு சவூதி அரேபியாவில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் கொலை, கொள்ளை, வன்புணர்வு, போதை பொருள் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடு வோருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதுமிகவும்அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் நடப்பு ஆண்டில் கடந்த 4 மாதங்களில் மட்டும் 48 பேருக்கு தலைதுண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர்களில் பாதிப்பேர் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தகவலை அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயல் படும் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அதில் சவூதிஅரேபியாவில் குற்ற வழக்குகளில் விசாரணை நடைமுறை மிகவும் கவலை அளிக்கிறது. சவூதி அரேபியாவில் அதிக எண்ணிக்கையில் மரண தண்டனை நிறைவேற்றுவது நல்லதல்ல. போதை பொருள் கடத்தல் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப் பதைக் குறைக்க நீதித்துறை நடை முறைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

சவூதியில் கடந்த வருடம் மட்டும் 150 பேரின் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை 600 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் போதைப் பொருள் கடத்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்கொரிய ஜனாதிபதியைச் சந்தித்த வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்

1953 ஆம் ஆண்டு கொரிய போருக்கு பிறகு வடகொரியா, தென்கொரியா நாட்டு ஜனாதிபதிகள் இருவரும் எல்லை கடந்து சந்தித்து கொண்ட வரலாற்று நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வடகொரியா அடுத்தடுத்து அணு ஆயுத, ஏவுகணை சோதனைகளை நடத்தியதால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் எழுந்தது. வடகொரியா மீது ஐ.நா. சபையும் அமெரிக்காவும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன.

திடீர் திருப்பமாக தென்கொரியாவின் அழைப்பை ஏற்று கடந்த பிப்ரவரியில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற்றது. அதன் பின் தென்கொரிய பிரதிநிதிகள் வட கொரியாவுக்குச் சென்று அந்த நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன்னை சந்தித்துப் பேசினர்.

அப்போது ஏப்ரல் 27 ஆம் திகதி இருநாடுகளின் உச்சி மாநாட்டை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி இரு நாட்டு எல்லையில் உள்ள அமைதி கிராமமான பான்முன்ஜியோமில் நேற்று உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்க வருகை தந்த வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னை, தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் வரவேற்றார்.

வடகொரியா தென் கொரிய நாடுகளை பிரிக்கும் எல்லைக் கோட்டு பகுதியில் வந்திறங்கிய வடகொரிய ஜனாதிபதி கிம்மை, தென்கொரிய ஜனாதிபதி மூன் கைகுலுக்கி வரவேற்றார்.

பின்னர் இருவரும் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். தென்கொரிய அதிகாரிகளை கிம்மிற்கு, மூன் அறிமுகம் செய்து வைத்தார். இவர்களது சந்திப்பின் போது ஆயிரக்கணக்கான ஊடகவியலாளர்கள் அங்கு குழுமி இருந்தனர்.

இந்த சந்திப்பில் அணு ஆயுத குறைப்பு உள்ளிட்டபல்வேறுவிவகாரங்கள்குறித்து ஆலோசனை நடத்தப்படும் என்றும் மேலும் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று தெரிகிறது.

மாநாட்டின் நினைவாக பான்முன் ஜியோம் அமைதி கிராமத்தில் மரம் நடப்பட உள்ளது. இதற்காக இருநாடுகளில் இருந்து மண், தண்ணீர் எடுத்து வரப்பட்டிருக்கிறது.

அடுத்த மாதம் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னும் அமெரிக்க அதிபர் ட்ரம்பும்சந்தித்துப்பேசதிட்டமிட்டுள்ளனர். அதற்கு இந்த உச்சி மாநாடு பாதை வகுக்கும் என்று கூறுகின்றனர். வடகொரியா, அணு ஆயுத திட்டங்களை கைவிடுவதாக கடந்த சில தினங்களுக்கு முன் அறிவித்து உள்ள நிலையில் அதை பேச்சில் இடம்பெறச்செய்து உறுதி செய்யும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

அது மட்டுமின்றி அடுத்த மாத இறுதியில் அல்லது ஜூன் மாத தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன்னும் சந்தித்து நடத்த உள்ள பேச்சுக்கு இந்த மாநாடு முன்னோட்டமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொரிய போர் முடிந்த பின்னர் (1953) வடகொரிய தலைவர் ஒருவர், தென் கொரியாவுக்கு செல்வது இதுவே முதல் முறை ஆகும். அவருடன் 9 பேர் அடங்கிய உயர்மட்டக்குழுவினரும் அங்கு செல்கின்றனர்.

தி.மு.கவினர் முற்றுகைப் போராட்டம்; டி.ஜி.பி. அலுவலகத்தில் பொலிஸார் குவிப்பு!

குட்கா ஊழல் தொடர்பாக டி.ஜி.பி. பதவிவிலக வலியுறுத்தி சென்னையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்தை தி.மு.க.வினர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள்ளனர் என தகவல் வெளியானதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குட்கா ஊழல் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ள நிலையில், குற் றம்சாட்டப்பட்டுள்ள டி.ஜி.பி. உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பதவி விலக வேண்டும் என தி.மு.க. வலியுறுத்தியது.

டி.ஜி.பி. மீதான குற்றச்சாட்டு என்பது விசாரணை அளவில் தான் உள்ளது. எனவே சி.பி.ஐ. விசாரணையை டி.ஜி.பி. சந்திப் பார் என்றும், அவர் பதவி விலக வாய்ப்பில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், குட்கா ஊழல் தொடர்பாக அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் டி.ஜி.பி. ராஜேந்திரன் ஆகியோர் பதவி விலக வலியுறுத்தி தி.மு.க. வினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

டி.ஜி.பி. ராஜேந்திரன் பதவி விலக வலியுறுத்தி சென்னை கடற்கரை சாலையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்தை தி.மு.க. வினர் முற்றுகையிட்டு போராட் டம் நடத்த திட்டமிட்டிருப்பதாக தகவல் பரவியது. குட்கா ஊழலை சி.பி.ஐ. விசாரிக்கக் கோரி வழக்கு தொடர்ந்த ஜெ.அன்பழகன் எம். எல்.ஏ. தலைமையில் இப்போராட் டம் நடைபெற உள்ளதாகவும் தெரியவந்தது.

இதையடுத்து டி.ஜி.பி. அலுவலகத்தில் வழக்கத்திற்கு மாறாக அதிக அளவில் பொலி ஸார் குவிக்கப்பட்டனர். இதே போல் கடற்கரை சாலை முழு வதும் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டது. காந்தி சிலை அருகிலும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ள னர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

ஆயுள் கைதி நளினியை முன்கூட்டியே விடுதலை செய்ய உத்தரவிட முடியாது

மனுவை நிராகரித்தது உயர்நீதிமன்றம்

ராஜீவ் காந்தி கொலை வழக் கில் தண்டனை அனுபவித்து வரும் நளினி தன்னை முன் கூட்டியே விடுதலை செய்ய உத் தரவிடக்கோரி தொடர்ந்த மேல் மு றை யீ ட் டு வ ழ க் கை சென்னை உயர்நீதிமன்றம் தள் ளுபடி செய் தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கை தான நளினி, முருகன், பேரறிவா ளன், றொபர்ட் பயஸ் உள்ளிட்ட 7 பேர் ஆயுள் தண்டனை கைதி களாக கடந்த 25 ஆண்டுகளுக் கும்மேலாகசிறையில்உள்ளனர்.

இவர்களை விடுதலை செய் வது தொடர்பாக தமிழக அரசு கடந்த 2014 ஆம் ஆண்டு சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற் றியது. இதை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவை யில் உள்ளது.

இந்த நிலையில், 20 ஆண் டுகள் சிறை தண்டனை நிறைவு செய்தவர்களை முன்கூட்டியே விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்துள்ள அர சாணையின் அடிப்படையில், தன்னையும் முன் கூட்டியே விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றில் கடந்த 2015 ஆம் ஆண்டு நளினி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதி பதிஎம்.சத்யநாராயணன், உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் பிறப்பிக்கப்படும் இறுதி தீர்ப்பின் அடிப்படையில், நளினியின் கோரிக்கையை தமிழக அரசு பரிசீலித்து சட்டப்படி முடிவு எடுக்க வேண்டும்' என்று உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி மேல்முறையீடு செய்தார்.

இந்த வழக்கின் வாதப் பிரதி வாதங்கள் முடிவடைந்த நிலை யில் நீதிபதி சசிதரன் அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது. அப் போது, முன்கூட்டியேநளினியை விடுதலை செய்யும்படி உத்தர விட முடியாது எனக் கூறிய நீதி பதிகள், நளினி தொடர்ந்த மேல் முறையிட்டு மனுவை நிராகரித் தனர்.

இதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவை யில் உள் ளதால், உயர்நீதிமன் றம் இதில் தலையிட முடியாது என்றும் நீதிபதிகள்தெரிவித்தனர்.

வேறு மாநில புலனாய்வு குழு அமைக்க வேண்டும்; சி.பி.ஐ. இயக்குநருக்கு மு.க.ஸ்டாலின் கடிதம்

குட்கா வழக்கு குறித்து விசாரிக்க வேறு மாநில சி.பி.ஐ. சிறப்பு புல னாய்வு குழுவை அமைக்க வேண் டும் என சி.பி.ஐ. இயக்குநருக்கு மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள் ளார்.

தி.மு.க. செயல் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரு மான மு.க.ஸ்டாலின் நேற்றுமுன் தினம் டில்லி சி.பி.ஐ. இயக்குநர் மற்றும் இந்திய உள்துறை செய லாளர் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்நாடு மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர் விஜயபாஸ் கர் மற்றும் தமிழக காவல்துறை



டி.ஜி.பி. டி.கே.ராஜேந்திரன் உள் ளிட்ட பல உயர் அதிகாரிகள் தொடர் புடைய குட்கா ஊழல் வழக்கு விசா ரணையை, தமிழக லஞ்ச ஒழிப் புத்துறையிடம் இருந்து சி.பி.ஐ. அமைப்புக்கு மாற்றி உயர் நீதி மன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

வழக்கின் முக்கியத்துவத்தை கருதியும், தமிழ்நாட்டின் முக்கிய மான இந்த வழக்கு விசாரணை நேர்மையாகவும், நியாயமாகவும், விரைவாகவும்நடைபெறும்பொருட் டும் நேர்மையான, அனு பவமிக்க, வேறு மாநிலங்களை சேர்ந்த அதி காரிகள் கொண்ட சி.பி. ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழுவை உடனடியாக அமைத்து, தடை செய்யப்பட்ட குட்கா போதைப்பொருள் விற்பனை ஊழல் அரசி யல்வாதிகள் மற்றும் நேர்மை யற்ற அதிகாரிகள் என ஒன்றோடு ஒன்று பின்னி பிணைந்துள்ள இரண்டையும் அப்புறப்படுத்தி, நீதியை நிலைநாட்ட விரைந்து நட வடிக்கை எடுக்கவேண்டும் என் றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு - காஷ்மீரில் ராணுவ முகாம் மீது பயங்கரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல்!



ஜம்மு - காஷ்மீரில் உள்ள இந்திய ராணுவ முகாம் மீது பயங் கரவாதிகள் வெடிகுண்டு வீசி தாக் குதல் நடத்தியதால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் ஊடுருவி உள்ள பயங்கரவாதிகள் ராணுவம் மற்றும் பொலிஸாரை குறிவைத்து தாக்குதல் நடத்தி வரு கின்றனர். பாதுகாப்புப் படையினர் தரப்பில் தக்க பதிலடி கொடுத்து பயங்கரவாதிகள் ஒடுக்கப்படுகின் றனர்.

இந்த நிலையில், புல்வாமா மாவட்டத்தில் உள்ள தகாப் பகுதி யிலுள்ள ராணுவ முகாம் அருகே நேற்று திடீரென வெடிகுண்டு வெடித்தது.

முகாமில்இருந்தசற்றுதொலை வில் பதுங்கியிருந்த பயங்கரவாதி கள் நேற்று அதிகாலையில் லோஞ் சர் மூலம் வெடிகுண்டுகளை வீசி யுள்ளனர். இதில் ஒரு வெடிகுண்டு ராணுவ முகாம் வேலி அருகே விழுந்து வெடித்துள்ளது.

இந்த தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும் வெடிகுண்டு வெடித்ததையடுத்து அப்பகுதியில் திடீர் பதற்றம் ஏற்பட் டது. ராணுவம் மற்றும் சி.ஆர். பி.எப். வீரர்கள் அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டைநடத்தி வருகின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கருணாநிதி அழைத்தால் மீண்டும் தி.மு.கவில் இணைந்து கொள்வேன்

– மு.க.அழகிரி

கருணாநிதி அழைத்தால் மீண் டும் தி.மு.கவில் இணைவேன் என்று முன்னாள் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக அரசிய லில் இருந்து முழுமையாக ஒதுங்கி யிருக்கும் அழகிரி, அவ்வப்போது தனது தம்பியும், தி.மு.க. செயல் தலை வருமான மு.க.ஸ்டாலினுக்கு எதிராக கருத்துகளைத் தெரிவித்து வந்தார்.

இந்தநிலையில், உடல்நலக்குறை வால் கடந்த ஓராண்டுக்கும் மேலாக வீட்டிலேயே ஓய்வெடுத்து வரும் தி.மு.க. தலைவரும், தனது தந்தையு மான கருணாநிதியை குடும்பத்தி னருடன் அழகிரி சந்தித்தார். அப்போது தனது தாயார் தயாளு அம்மாளை யும் சந்தித்துப் பேசியுள்ளார்.

அதன் பிறகு நேற்று முன்தினம் காலை மதுரை திரும்பும் முன்பு சென்னை விமான நிலையத்தில் ஊட கவியலாளர்களிடம் பேசிய அழகிரி, "எனது தாய், தந்தையை சந்திப்பதற் காக சென்னை வந்தேன். சந்தித்து விட்டேன். கருணாநிதி நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார். அவர் அழைத் தால்மீண்டும்தி.மு.கவில்இணைந்து பணியாற்றுவேன்" என்றார்.

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு மக் களவைத்தேர்தல்வரவுள்ளநிலையில் மத்திய, மாநில அரசுகளுக்கு எதிரான பல்வேறு போராட்டங்களால் தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. காங் கிரஸ், மதி.மு.க. இடதுசாரி கட்சிகள், வி.சி.க, முஸ்லிம் லீக் உட்பட 8 கட்சி களை ஒருங்கிணைத்து மு.க.ஸ்டா லின் மத்திய, மாநில அரசுகளுக்கு எதி ராகப் போராட்டங்களை நடத்தி வருகி றார்.

இந்தச் சூழலில் கருணாநிதி அழைத்தால் தி.மு.கவில் இணை வேன்என்றுஅழகிரிகூறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அழகிரியின் ஆதர வாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த 4 ஆண்டுகளாக தீவிர அரசி யலில் இருந்து ஒதுங்கியிருக்கும் அழகிரி, அரசியலில் இறங்குவதற்கான நேரத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கி றார். இன்னும் சில மாதங்களில் மக் களவைத் தேர்தலுக்கான காய்நகர்த் தல்கள்தொடங்கிவிடும். எனவே, தி.மு.க வில் இணைவதற்கான முயற்சியில் அழகிரி ஈடுபட்டிருக்கிறார்" என்றனர்.

இந்தியா– சீனா உறவின் வளர்ச்சி பற்றி மறு ஆய்வு

அங்கு புறப்பட்ட வேளை பிரதமர் மோடி தகவல்

இந்தியா, சீனா இடையிலான உறவில் நீண்டகால அடிப்படையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்து மறு ஆய்வு செய்யப்படும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித் துள்ளார்.

சிக்கிம் மாநில எல்லையை ஒட்டிய டோக்லாம் பகுதியில் இந்திய ராணுவத்துக் கும் சீன ராணுவத்துக்கும் இடையே கடந்த ஆண்டு ஏற்பட்ட மோதல் 73 நாள்களுக்கு நீடித்தது. இதனால் இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில், இதை சரிசெய்யும் வகை யில் இருதரப்பு உச்சி மாநாடு சீனாவின் வுஹான் நகரில் இன்றும் நாளையும் நடை பெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் அந் நாட்டுக்கு புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக மோடி வெளியிட்ட அறிக் கையில் -

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித் துப் பேச உள்ளேன். அப்போது, இருதரப்பு மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து கருத்துகள் பரிமாறிக்கொள்ளப்படும்.

குறிப்பாக, இப்போதுள்ள சர்வதேச சூழலில், இரு நாடுகளின் வளர்ச்சி தொடர் பான தொலைநோக்கு திட்டங்கள் மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய விட யங்கள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளோம். மேலும் நீண்டகால அடிப்ப டையில் இந்தியா, சீனா இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி தொடர்பாக மறு ஆய்வு செய்யப்படும் எனக் கூறப்பட் டுள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை துணை அமைச்சர் கோங் ஜுவான்யு கூறும் போது, இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர் பாக இரு தலைவர்களும் ஆலோசனை நடத்துவர். - என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு கோரிக்கை விடுத்து மகஜர் சமர்ப்பித்துள்ளனர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள்.

இந்த மகஜர் நேற்று முதலமைச்சரின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

யாழ். மாநகர சபையின் சகல விதமான செயற்பாடுகளும் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் முதலாவது கூட்ட அமர்வைத் தொடர்ந்து சபையின் முழுமையான அதிகாரத்தின் கீழ் வந்தன.

அதன் பின்னர் கடந்த 11ஆம் திகதி மற்றொரு சபை கூட்டம் நடைபெற்றபோதும் சபையின் நிதிக் குழு உட்பட எந்தவொரு உபகுழுவும் இதுவரை அமைக்கப்படவில்லை.

இந்நிலையில் சபையின் எந்தவொரு அனுமதியுமின்றி நிதிக் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

மேலும் சபையின் எத்தகைய அனுமதியுமின்றி வீதிப் புனரமைப்புக்கான கேள்விப்பத்திரக் கோரல் கடந்த 18 ஆம் திகதி பத்திரிகையில் முதல்வரின் பெயரில் வெளியாகியுள்ளது.

இந்தச் செயற்பாடுகளை மாநகர முதல்வர் தன்னிச்சையாகக் கையாண்டுள்ளார் என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இந்தச் செயற்பாடுகள் மாநகர சபைக்கான சட்டவிதி முறைகளை முற்றாக மீறும் செயலாகும் என்பதுடன் சபையில் பாரிய நிதி மோசடி அல்லது முறைகேடுகள் நடைபெறுகின்றனவோ என்ற அச்சத்தை எமக்குத் தோற்றுவித்துள்ளன.

அத்துடன் சபைக்கான உபகுழுக்களும் இதுவரை அமைக்கப்படாமல் சபையின் செயற்பாடுகளும் மாநகர முதல்வரினால் தன்னிச்சையாக செயற்படுத்தப்படுகின்றன என்பதையும் தங்கள் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

உபகுழுக்களை உருவாக்குவதற்காக உடனடியாகச் சபையின் விசேட கூட்டத்தைக் கூட்டுமாறு மாநகர முதல்வருக்கு கடந்த 20ஆம் திகதி கடிதம் மூலம் எமது உறுப்பினர்களால் கோரிக்கை விடப்பட்டபோதும் இதுவரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த 19 ஆம் திகதி திகதியிடப்பட்டும் மாநகர சபை முதல்வரால் கையப்பமிடப்பட்டும் மாநகர சபை இலட்சினையுடனான கடிதத் தலைப்பில் மாநகர முதல்வரின் பிரத்தியேக இணைப்பாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடானது மாநகர சபை சட்ட விதிகளுக்கு முரணானது என்பதுடன் மாநகர முதல்வர் தனது பதவிக்கான அதிகாரத்தைத் துஸ்பிரயோகம் செய்துள்ளார் என்பதையும் உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

இவற்றைக் கருத்திற் கொண்டு இவற்றுடன் தொடர்புடையவர்கள் மீது உரிய விசாரணை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துச் சபையின் செயற்பாடுகள் சட்டம் ஒழுங்குக்கு உட்பட்டு நடைபெறுவதற்கு ஆவன செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். – என்றுள்ளது. (ஐ–7)

இரணைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் இரணைதீவுக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபடும் மக்களைச் சந்தித்து வழங்கினார். அத்துடன் அவர்களது தேவைகள் குறித்தும் தற்போதைய நிலைமைகள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

புலம்பெயர் ஆதரவாளர்களின் நிதிப்பங்களிப்புடன் இரணைதீவு மக்களுக்கு இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரணைதீவை விடுவிக்குமாறு கோரி மக்கள் அங்கு தங்கியிருந்து போராட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ–7)

வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பிரதான வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக நீங்கள் போட்டியிட உள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருக்கிறதே என சுமந்திரனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர்,

நான் போட்டியிடுவதாக வந்த செய்திகளில் உண்மையில்லை. அவ்வாறு போட்டியிடும் எண்ணம் எனக்கும் இல்லை. அதேபோன்று கட்சிக்கும் அவ்வாறானதொரு எண்ணம் கிடையாது என்றே நான் நம்புகிறேன். – என்றார். (ஐ–7)

மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கான கட்டளையை வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ, சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கினார்.

சாவகச்சேரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்று வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டுக் கும்பலொன்று அடாவடிகளில் ஈடுபட்டது. அதனால் அந்த வீடுகளில் பெறுமதியான பொருள்கள் நாசமாகின.

அத்துடன், கொக்குவில் முதலி கோவிலடியில் ஆவா கும்பலைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுவரால் ஒருவர் வாள்வெட்டுக்குள்ளானார்.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் நேற்று வரை கைது செய்யப்படவில்லை. இந்த நிலை தொடர்ந்தால் அடங்கியிருந்த வாள்வெட்டுக் கும்பல்கள் மீளவும் அடாவடிகளில் ஈடுபடுமென வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறைகளை நேற்று தொடக்கம் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்த வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார். (ஐ–7)

தங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மட்டுமே நிறைவேற்ற வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைச்சருமான நிமல் சிறிபாலடி சில்வா கடுமையாக எச்சரித்துள்ளார்.

ஏனைய கட்சிகளுக்குள்ளும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள போதிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்படுகின்ற அரசியல் நெருக்கடிகளை மட்டுமே ஊடகங்கள் பெரிதுபடுத்திக் காட்டுவதாகக் குற்றம் சாட்டிய அமைச்சர், எதிர்வரும் மே தினத்தின் பின்னர் சுதந்திரக் கட்சி புதிய பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது என்றும் கூறினார்.

எதிர்வரும் மே தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சுதந்திரக் கட்சியின் மே தினத்தை ஒழுங்கமைக்கும் பொறுப்பைப் பெற்றுள்ள போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்ததோடு கட்சியின் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக இப்போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் சற்று ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் பதிலளித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று பிளவுபடவில்லையா? ஜே.வி.பி பிளவடையவில்லையா? ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடையும் போதே ஊடகங்களின் உடம்பு வலிக்கிறது. ஏனைய கட்சிகளின் பிளவுகள் தொடர்பாக ஊடகங்கள் பேசுவதில்லை. அவற்றை பாதுகாக்கின்றீர்கள். சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த உதவிசெய்கிறீர்கள், அப்படிதானே? அதை தானே செய்கிறீர்கள்.

இன்று அனைத்து அரசியல் கட்சிகளிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் அரசியலின் சுபாவம். அதனை முகாமை செய்துகொள்ளக் கட்சிகள் தெரிந்துகொள்ள வேண்டும். அதனை நாங்களும் செய்கின்றோம். ஏனைய கட்சிகளும் செய்கின்றன. யாரது முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற வகையில்தான் தேர்தல் பிரதிபலன்களும் அமையும்.

கட்சி இரண்டாகப் பிளவுபட்டது புதிய செய்தியல்ல. சுதந்திரக் கட்சியில் இரு பிரிவினர் இருக்கிறார்கள்தான். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, முஸ்லிம்காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவற்றிலும் பிளவுகள் காணப்படுகின்றன. இதுதான் அரசியல் பரிணாமம். – என்றார்.

இதேவேளை தேசிய அரசிலிருந்து அண்மையில் வெளியேறிய சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் அணியினரால் ஏற்பாடு செய்யப்படும் மே தினக்கூட்டத்துக்குச் செல்லாமல் சுதந்திரக் கட்சியின் மே தினக்கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

ஐ.தே.கவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளேன். புதிய நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து கட்சியை மேலும் பலப்படுத்துவேன். இது உறுதி.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கட்சியின் முக்கிய பதவிகளுக்குப்பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு இந்தக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதில் உரையாற்றும்போதே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது கட்சிக்குள் சில முரண்பாடுகள் இருந்தபடியால்தான் கட்சியை முழுமையாக மறுசீரமைத்துள்ளேன். கட்சியின் முக்கியபதவிகளுக்குநியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு எனது இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியை எந்தச் சக்தியாலும் வீழ்த்தவே முடியாது. புதிய நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து கட்சியை மேலும் பலப்படுத்துவேன். இது உறுதி.

நாட்டில் மூவின இனத்தவர்களும் எமது கட்சியை ஆதரிக்கின்றார்கள். எனவே, மூவின மக்களின் பிரச்சினைகளுக்கும் நாம் இன – மத வேறுபாடுகளின்றி ஓரணியில் நின்று குரல் கொடுக்கவேண்டும்.

சர்வதிகார ஆட்சிலிருந்து நாட்டு மக்களினால் விரட்டியடிக்கப்பட்டவர்கள் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் கையிலெடுத்துள்ளார்கள். இதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

நாடாளுமன்றில் அண்மையில் எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது எனக்காக ஓரணியில் நின்று அந்தப் பிரேரணையைத் தோற்கடித்த எமது கட்சி உறுப்பினர்களை நான் மறக்கவேமாட்டேன். – என்றார். (ஐ)

தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன், கடையின் உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீன்பிடிச் சட்டத்தின் கீழ் தங்கூசி வலைகள் தடை செய்யப்பட்டிருந்த நிலையில் இந்த உரிமையாளர் மேற்படி வலைகளை இரகசியமான முறையில் விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ். மாவட்டக் கடற்தொழில் நீரியல்வள அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்கொண்ட தேடுதலின்போதே இந்த வலைகள் மீட்கப்பட்டன.

25ஆயிரம் கிலோ எடையுள்ள இந்த வலைகளின் தற்போதைய சந்தைப் பெறுமதி சுமார் 25 லட்சம் ரூபா எனத் தெரிவித்த கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள், இந்த விடயத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க இருப்பதாகவும் தெரிவித்தனர். (ஐ)

காஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 245 ரூபாவால் அதிகரிக்கப்படுகிறது.

இந்த விலை அதிகரிப்புக்குப் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அனுமதியளித்தது. (ஐ)

அலரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் மாயமாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அலரி மாளிகையிலிருந்து திருடப்பட்ட மடிக்கணினிகளிலிருந்து முக்கிய, இரகசியத் தகவல்கள் ஏதேனும் கசிந்திருக்கலாம் என்ற சந்தேகம் விமர்சகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்படாத நிலையில், இதுவும் பல்வேறு சந்தேகங்களுக்கு வித்திட்டுள்ளது.

பிரதமரின் மேலதிக செயலாளர் சமன் அத்தாவுடஹெட்டியின் ஊடகப் பிரிவின் பொறுப்பில் அலரி மாளிகையின் மாடி அறையொன்றில் வைக்கப்பட்டிருந்த பெறுமதிவாய்ந்த பொருள்களே இவ்வாறு மாயமாகியுள்ளன.

அலரி மாளிகையில் பணியாற்றும் அதிகாரிகளின் தேவைக்கென அவற்றை எடுக்கச் சென்ற வேளையிலேயே அவை காணாமல் போயுள்ளமை கண்டறியப்பட்டது.

இது குறித்து உடனடியாக பிரதமருக்குஅறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, கொள்ளுபிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், இந்த விடயம் பொலிஸ் நிலையம்வரை நீடித்தால் அது அலரி மாளிகையிலுள்ள அதிகாரிகளுக்குச் சிக்கல்களை ஏற்படுத்தும் எனத் தெரிவித்து அந்த யோசனையை அலரி மாளிகையின் திட்டமிடல் இயக்குநர் ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஹரிஸ்சந்திர விக்ரமசிங்க நிராகரித்துள்ளார்.

அத்துடன், உள்ளக விசாரணையின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இதுவரை எவ்வித உள்ளக விசாரணைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என அலரி மாளிகைத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கனடாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டானியல் ஜேனை மேற்கோள்காட்டி கனேடிய இணையத்தளம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஜஸ்ரின் ட்ரூடேயின் புத்தாண்டு வாழ்த்துச் செய்திகளில் தமிழ் மக்களுக்கு மாத்திரமே வாழ்த்துக் கூறப்பட்டிருப்பதாகவும், பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களை அவர் புறக்கணித்துள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் ஊடாகக் கனடாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான ராஜதந்திர உறவில் பாதிப்பு ஏற்படலாம் என்றும், இந்த நிலையில், எதிர்வரும் விசாகப்பூரணை தினத்தை முன்னிட்டு, சிங்கள பௌத்த மக்களுக்கு வாழ்த்துச் செய்தியைப் பிரதமர் அனுப்பவேண்டும் என்றும் கனேடிய பாதுகாப்பு ஆலோசகர் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பதில் வழங்கியுள்ள கனடாவின் பிரதமர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர், தமிழர்கள் விடயத்தில் முன்னைய அரசு கடைபிடித்த நடைமுறையையே இப்போதும் பின்பற்றுவதாகத் தெரிவித்துள்ளார். (ஐ)

கேள்வி அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சபை நிதி வேலைத்திட்டம் (Council Fund) – 2018

01 தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் கட்டட வேலைகளுக்காக கோருகின்றார்.

02 தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(i) இலக்க 16.03.2016 ம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்த வர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தைகொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03 கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமானதரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவுமேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04 தேவையானதகைமைகள்,கேள்விஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளன.

05 ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் (தொலைபேசி: 0212250144, தொலைநகல் :021 2250144, மின்னஞ்சல்: valiwestps@gmail.com இல் இருந்து மேலதிக தகவல் களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில்காலை 09.00 மணிமுதல் பி.ப. 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்விஆவணங்களை பார்வையிடலாம்.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம்,என்னும் இடத்தில் 01.05.2018ஆம் திகதியிலிருந்து 21.05.2018ஆம் திகதிவரைகாலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2500/- (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ள லாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07 கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து வலிகாமம் மேற்குபிரதேச சபை,சுழிபுரம் என்னும் முகவரிக்கு22.05.2018ம் திகதிபி.ப 14.30 மணிக்குமுன்பதாககிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது மேற்படிஅலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08 கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று - 24.07.2018) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

தொ. இல	ஒப்பந்தஎண்	வேலைவிபரம்	மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா)	ஒப்பந்த காலம்	வேண்டப் படும் தரம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
						பிணை வைப்பு	செல்லு படியாகும் காலம்
01	NP/14/41(17)/02/CF/ 02-2018	மெய்கண்டான் பாடசாலைஒழுங்கை புனரமைத்தல்	1.452Mn	03 மாதங்கள்	C9 வீதி	14,530.00	21.08.2018
02	NP/14/41(17)/02/CF/ 03-2018	பண்ணாகம் 4ம் ஒழுங்கை புனரமைத்தல்	1.698Mn	03 மாதங்கள்	C 9 வீதி	16,990.00	21.08.2018
03	NP/14/41(17)/02/CF/ 04-2018	மாவடி வைரவர் வீதி, சித்தன்கேணி புனரமைத்தல்	1.694Mn	03 மாதங்கள்	C 9 வீதி	16,940.00	21.08.2018
04	NP/14/41(17)/02/CF/ 05-2018	நெல்லியான் வைரவர் கோவில் வீதி புனரமைத்தல்	1.195Mn	03 மாதங்கள்	C 9 வீதி	11,950.00	21.08.2018
05	NP/14/41(17)/02/CF/ 10-2018	செல்லையா வாத்தியார் வீதி புனரமைத்தல்	2.232Mn	03 மாதங்கள்	C 8 வீதி	22,330.00	21.08.2018
06	NP/14/41(17)/02/CF/ 11-2018	ஓடக்கரை இரண்டாம் ஒழுங்கை புனரமைத்தல்	0.585Mn	02 மாதங்கள்	C 9 வீதி	5,860.00	21.08.2018
07	NP/14/41(17)/02/CF/ 07-2018	வட்டுக்கோட்டை கலட்டி வீதி	0.341Mn	02 மாதங்கள்	C 9 வீதி	3,415.00	21.08.2018
08	NP/14/41(17)/02/CF/ 08-2018	வட்டுக்கோட்டை ஓடக்கரை இணைப்பு வீதி புனரமைத்தல்	1.200Mn	03 மாதங்கள்	C 9 வீதி	12,003.00	21.08.2018
09	NP/14/41(17)/02/CF/ 09-2018	துலைமை அலுவலகவாகன தரிப்பிட நிலக்காறை அமைத்தல்	0.420Mn	03 மாதங்கள்	C 9 கட்டடம்	4,209.00	21.08.2018

10 கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்குபிரதேசசபைக் கட்டடத்தில் 15.05.2018 அன்று பி.ப 14.30மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ளமுடியும்.

11 சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள் கேள்விகோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

திரு.த.நடனேந்திரன்
தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்.
27.04.2018.

2028 ஒலிம்பிக்கில் கிரிக்கெட் நிச்சயம்

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் 2028 ஆம் ஆண்டு நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் கிரிக் கெட் சேர்க்கப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நம்பிக்கை தெரி வித்துள்ளது.

கொல்கத்தாவில் சர்வ தேச கிரிக்கெட் சபையின் 5 நாள் நிர்வாக ரீதியிலான கூட்டம் நடந்தது. கடைசி நாளான நேற்று ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரி டேவ் ரிச்சார்ட்சன் ஊடக வியலாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டைச் சேர்க்க ஐ.சி.சி. தீவிரமாக முயன்று வருகிறது. அதற் கான நடவடிக்கைகளை வேகமாக எடுத்து வருகி றோம். எங்கள் முயற்சிகள் சரியான திசையில் சென் றால், 2028ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடக்கும் ஒலிம்பிக் போட்டி யில் நிச்சயம் கிரிக்கெட் இடம்பெறும்.

கடந்த 1900 ஆம் ஆண்டு பாரீஸில் நடந்த கோடை கால ஒலிம்பிக் போட்டியில் மட்டுமே கிரிக்கெட் இடம்பெற்றது. அ த ன் பி ன் இ ன் னு ம் இடம்பெறவில்லை.

2024ஆம் ஆண்டு நடக்கும் ஒலிம்பிக் போட்டி யில் கிரிக்கெட்டைச் சேர்க்க கோரும் மனுவைச் சர்வ தேச ஒலிம்பிக் சங்கத்தில் அளிக்கும் காலக்கெடு முடிந்துவிட்டது. ஆதலால், 2028ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியில் சேர்க்க தீவிரமாக முயற்சிகள் நடந்து வருகின்றன. எங்களின் பேச்சு சிறப்பாகச் செல்லும் பட்சத்தில் 2028 ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம் பெறும். - என்றார்.

ரி-20 ஆட்டங்களுக்கு சர்வதேச அந்தஸ்து

2021ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற இருந்த சம்பியன்ஸ் கிண் ணத் தொடரை உலகக் கிண்ண ரி-20 தொடராக நடத்த ஐ.சி.சி. முடிவு செய் துள்ளது.

50 ஓவர் வடிவிலான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஐ.சி.சி. தரவரி சையில் முதல் 8 இடங் களை பிடிக்கும் அணிகளே கலந்து கொள்ளும். இம் முறை ரி-20 உலகக் கிண் ணத் தொடராக நடத்தப்படு வதால் இந்தத் தொடரில் 16 அணிகள் கலந்து கொள்ளும் என தெரிவிக் கப்பட்டுள்ளது. ஐ.சி.சியின் இந்த முடிவுக்கு இந்திய கிரிக்கெட் சம்மதம் தெரி வித்துள்ளது.

Chennai Super Kings
V
Mumbai Indians
இன்று
28.04.2018
இரவு 8.00 மணி

காலைக்கதிர் Kalaikkathir

வெண்கரம் படிப்பகத்தில் ஊடகர் ரூபனின் நினைவு

யாழ்ப்பாணம், ஏப்.28

ஊடகவியலாளர் அமரர் அராலியூர் செ.ரூபன் அவர்களின் 8 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை ஊடகவியலாளர் ந.பொன்ராசா தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடர் ஏற்றலுடன் நினைவேந்தல் ஆரம்பமானது. ரூபனின் சகோதரி செ.மல்லிகாதேவி பொதுச்சுடர் ஏற்றினார். தொடர்ந்து ரூபனின் திருவுருவப் படத்திற்கு அவரது உறவினர் கி.பூபதி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ், யாழ்.மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நடனேந்திரன், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தே.றஜீவன், சிரேஷ்ட சட்டத்தரணி கே.சுகாஸ் மற்றும் பொன்னாலை கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர்.

இவர்கள் தமது உரையில் அமரர் ரூபனின் தேசியப்பற்றுடன் கூடிய ஊடகப் பணியை விதந்துரைத்தனர். தமிழீழ மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட காலத்தில், யுத்தம் எமது மண்ணை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த காலத்தில் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல் ஊடகப் பணி ஆற்றிய ரூபன், இன்று எம் மத்தியில் இல்லாதது துரதிஷ்டவசமானது எனக் கூறினர்.

அமரர் ரூபனின் நினைவு தினத்தை முன்னிட்டு பொன்னாலை ஸ்ரீ கண்ணன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கு இந்த நிகழ்வின் போது வெற்றிக் கேடயங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ)

எதிரணியில் அமர இடம் கேட்கும் சு.கவின் எம்.பிக்கள்

தேசிய அரசிலிருந்து விலகிய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேரும், எதிரணியில் அமர்வதற்கு ஆசனங்களை ஒதுக்கித் தருமாறு, நாடாளுமன்றப் பொதுச்செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

பிரதமருக்கு எதிராகக் கூட்டு எதிரணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது, மேற்படி 16 பேரும், அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இந்நிலையில், புதிய நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி பிற்பகல் 2.15 மணிக்கு நடைபெறவுள்ள நிலையிலேயே, சு.கவிலிருந்து விலகிய 16 பேரும், தமது கோரிக்கை அடங்கிய கடிதத்தை, நாடாளுமன்றப் பொதுச் செயலாளருக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைத்துள்ளனர். (ஐ)



திருநெல்வேலியில்...

தேனு களஞ்சியத்தின் புதியதோர் உதயம்

Thenu SUPER MART
No.50, Adiyapatham Road, Thirunelvely.

FRESH SERVICE EVERYDAY

விசேட விலைக்கழிவு நீடிக்கப்பட்டுள்ளது

கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
அத்துடன் 2500/= பெறுமதிக்கு மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.
15.05.2018 அன்று குலுக்கல் இடம்பெற்று பரிசில்கள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - 3 பவுண் தங்க நாணயம்.
2 ஆம் பரிசு - 2 பவுண் தங்க நாணயம்.
3 ஆம் பரிசு - 1 பவுண் தங்க நாணயம்.

ஆறுதல் பரிசாக 50 சிறுவர்களுக்கு சிறப்புப் பரிசு வழங்கப்படும்.

தேனு சுப்பர் மார்ட்

இல.50, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.